ISSN 2424-6654



தமிழ்த் தூது

# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 30




ஆடி- ஆவணி 2017
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
விலை ரூபா 100/=

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உங்கள் எண்ணம் போல் நகைகளையும் புடைவைகளையும்
தெரிவு செய்து கொள்ளுங்கள்



பொன்னுருக்கலுக்கான வசதிகள்
செய்து தரப்படுவதுடன் தாலிக்கொடிகள்
அனைத்தும் தங்கத்தின் விலைக்கே
செய்து தரப்படும்

கூறைப் புடைவைகள்
பட்டுப்புடைவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும்
30%
விலைக் கழிவில்!

## SELVARAJA
### Gold House & Textiles
Exclusive Designer Jewellery & Sarees



YOU
ARE
THE
BEST
FOR
YOU
WE ARE THE BEST

**162B, Mitcham Road, London SW17 9NJ**
**Tel : 020 8767 3795 | 07825 005 269**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# AA Accounting & Business Solutions Associates

**265 Haydons Road / London SW19 8TY**

**Accountants and Management Consultants**

*for Efficient and Quality Professional Accounting Services*

*We Specialise in*

- *Year End Accounts Preparation*
- *Management Accounts*
- *Solicitors Accounts*
- *Book Keeping*
- *Self Assessment Tax Returns*
- *Vat and TAX Investigations*
- *Payroll Preparation*
- *Business Startup Advice*
- *Business Plans and Cash Flow Forecasts*
- *Management Consultancy*





*Also through our contacts we are able to raise Finance for New Business*

Contact:

**Uthayanan or Sasi**

**Mob : 0774 7794 358 / 07786 966 207 Tel : 020 8545 0205**

**www.aa-accounts.co.uk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# தாயக ஒலி

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி - ஆவணி 2017 வில்-05 ஒலி-30

இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வெளியிடும்

## தாயக ஒலி

**பிரதம ஆசிரியர்**

த.சிவசுப்பிரமணியம் (தம்பு சிவா)

தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**

தாயகன் (இலண்டன்), சி.பவன் ( இலங்கை)

**மதியுரைக் குழு**

பேராசிரியர் சபா ஜெயராசா

வவுனியூர் இரா உதயணன்

சைவப்புலவர் சு.செல்லத்துரை

ந.கருணை ஆனந்தன்

எஸ்.ஈஸ்வரநாதன் (இலண்டன்)

வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**

மூ.சிவலிங்கம்

கா.வைத்தீஸ்வரன்

கதிரவேலு மகாதேவா

செ.ராஜேந்திரா

இ.ஜீவகாந்தன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள் :**

கனடா : முருகேசு கிருபாகரன்
து.நடராஜா, அ.பற்குணனன்

இலண்டன் : இ.பாலேந்திரநாதன்

அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்

பிரான்ஸ் : ச.சச்சிதானந்தம்

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர்**

**திருமலை பாலா**

தொ.பேசி : 0044(0) 7956486014

தொடர்பு : 9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை
தொ.பேசி. : 0094(0)112364124

Email : editorthayakaoli@gmail.com

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்

– ஆசிரியர்

**உள்ளே ஒலிப்பவை**

பேனா முனையிலிருந்து... 02

**கட்டுரை :**
- ஆடலியற்றலின் எழுகோலங்கள் 03
- எண்பத்தேழு வயதிலும்..... நீர்வை 07
- பின்லாந்து நாட்டுக் கல்வித்திட்டம் 13
- மனதை தொட்டதும் சுட்டதும் 18
- முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரன் 20
- தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் 36
- சமகால நவீன தமிழ் இலக்கியச் சிந்தனைகள் 39
- பெண்ணெனும் ஓவியம் 44

**சிறுகதை :**
- கோடாரிக்காம்பு 24

**உருவகக் கதை :**
- தாபம் 06

**புதிர் சிறுகதை :**
- யார் புத்திசாலி? 11

**சிறுவர் கதை**
- காட்டுச் சேவலின் மகிழ்ச்சி 16

**நாடோடிக் கதை :**
- கேடு செய்ய நினைப்பவன் கெடுவான் 41

**நகைச்சுவை கதை :**
- அசத்தலான கணவன் 43

**பாலபாடக் கதை :**
- கல்வியின் பயன் 45

**கவிதை :**
- மாவோவின் கவிதைகள் 12
- மறைந்தாரே 19
- பெரியோரைப் பேணுவோம் 31
- குரலற்ற மனிதர்கள் 32

**அறிந்ததைச் சொல்ல வந்தோம்**
- பட்டுக்கோட்டையாரின் மனது 33
- எழுத்துச் சிகரம் தந்த தொடர் 33
- கஸ்தூரிரங்கனும் கணையாளியும் 34

**நூல் அறிமுகம்**
- விளைச்சல் 42

**உங்கள் விருந்து:** 46-48

**ஏனையவை :**
- முரளீதரனுக்குக் கிடைத்த கீர்த்தி 15
- அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் 17
- சமயம் மனிதனுக்கு வழிகாட்டுகிறது 23
- உன்னதமான மிகச் சிறந்த பரிசு 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேனா முனையிலிருந்து....**



# மனிதம் மரணித்துவிட்டது

இந்தச் சின்னஞ்சிறிய நாடு முன்னேற்றம் காண வேண்டும். எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும். வறுமை நீங்கி சுபீட்சம் காண வேண்டும் என்று வேண்டப் பெறுவது பொருத்தமாக இருந்தாலும், நடைமுறையில் பல சாவல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையே இங்கு காணப்படுகின்றது. இதற்கான காரணம், மனிதர்களாகிய நாம் மனிதர்களாக வாழுகின்றோமா? என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

வீட்டில் தொடங்கி பொது நிறுவனங்கள் வரை மனிதனுடைய செயற்பாடுகள் எவ்வகையில் அமைகின்றன என்பதை முதலில் நோக்குவோம். கணவன் மனைவிக்கிடையே பொருத்தப்பாடற்ற நிலை, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்புடன் செயற்படாத நிலை. பிள்ளைகளுடனான உறவும் விரிசல்களும் மேலோங்கும் நிலை என்பன வீடு என்ற அடைப்புக்குள் நடைபெற்றுவரும் தொழிற்பாடு. நான் என்ற மமதை எனக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற இறுமாப்பு கொண்ட மனிதன் சுயநலம் மிக்கவனாக இருக்கின்றான். கோயில், குளம் என்று ஓடித்திரிந்து தான் நினைப்பதெல்லாம் ஈடேற்ற வேண்டுமென்று விரதமும் இருந்து நடித்து ஆண்டவனையும் மற்றவர்களையும் ஏமாற்றுகின்றான். "மனம் அது சுத்தமானால் மந்திரம் தேவையில்லை" என்பதன் உண்மை விளக்கம் தெரிந்திருந்தால் கபட நாடகம் ஆடமாட்டான். மனிதனாகவே வாழ முற்படுவான்.

மற்றவர்கள் மேல் பொறாமை, வஞ்சம் கொண்டு உலாவரும் மனித ஜடங்கள் இம்மண்ணில் எப்படித் தோன்றினார்கள். சமூக நன்மை கருதி ஒரு மனிதன் முன்னெடுக்கும் நல்ல செயற்பாடு களுக்கெல்லாம் இடையூறுகளும் முட்டுக்கட்டைகளும் போடுவதுடன், நிறைவேறவிடாமல் தடுப்பதற்காக ஆலாய்ப் பறந்து திரிகின்றார்கள். தாம் செய்கின்ற இக் கீழ்த்தரமான செயற்பாடுகள் மற்றவர்களுக்குத் தெரியாது என்று எண்ணும் இவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். 'பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடித்தால் மற்றவர்களுக்குத் தெரியாது' என்று எண்ணுமாம். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதிருக்கலாமல்லவா? இதையேன் அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. நடைமுறை வாழ்க்கையில் காணும் உண்மைக் காட்சிகள் மனச்சாட்சி உள்ள மனிதனை உறுத்துமல்லவா? மற்றவர்கள் மதிப்புடன் இருந்தால் அவர்களை வாழ விடாது குழிபறிக்கும் மனோபாவம் கொண்டவர்கள் எப்படி சமுதாயத்தில் மனிதர்களாக வாழ முடியும். இத்தகைய பச்சோந்திகள் பொது நிறுவனங்களுக் குள்ளும் ஊடுருவி அவற்றின் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கும் குந்தகம் ஏற்படுத்தும் நச்சுப்பாம்புகளாக இருப்பதும் கண்கூடு. அது ஒருவகை நோய் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

"நெஞ்சுபொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்" என்று பாரதியின் பாடல் வரிகள் இத்தகையவர்களை எண்ணும் போது முன்னிற்கின்றது. பொறாமை கொண்டு அலையும் மாக்களுக்காக திருவள்ளுவரும் குறள் தந்துள்ளார்.

*"அழுக்காறு உடையார்க்கு அது சாலும் ஒன்னார்*
*வழுக்கியும் கேடுஈன் பது"*

அதாவது பிறர் மீது பொறமைப்படுவோர்க்குப் பகைவர்கள் கேடுசெய்ய வேண்டியதல்லை. அந்தப் பொறாமையே பகையாகி அவர்களுக்குக் கேடு செய்து விடும் என்கிறார் பொய்யாமொழிப் புலவர். சிலருக்கு உண்மைகள் கசக்குமாம். இன்றைய சமுதாயத்திலே மனிதத்தன்மையே இல்லாது மற்றவர்களுக்குக் கேடு செய்யும் மனிதப் பிறவிகளால் மனிதம் மரணித்து விட்டது என்றே சொல்லத் தோன்றுகிறது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**- ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலியற்றலின் எழுகோலங்கள்

பேராசிரியர் சபா.ஜெயராசா



“ஆடலியற்றலியல்” (Choreography) என்ற செயற்பாடு தமிழ் மரபில் மீளாய்வுக்குரியதாகின்றது. மரபுவழி முகிழ்ந்த பரதநாட்டியம் என்பது மீறமுடியாத வரையறைகளுக்கு உட்பட்ட செயற்பாடு. அடைவுகளும் முத்திரைகளும் திட்டவட்டமான வரையறைகளுக்கு உட்பட்டவை. “சஞ்சாரிபாவம்” என்பது கற்பனைகளுக்கு இடமளித்தாலும் அங்கும் பரதநாட்டிய வரையறைகளை மீறிச் செயற்படமுடியாது. இவ்வாறான இடர்பாடுகளின் எழுபுலத்திலேதான் ஆடலியற்றலியல் அழகியல் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

புத்தாக்க மலர்ச்சியுடன் ஆடலை உருவாக்கும் கலையே ஆடலியற்றியலாகிறது. பொருத்தமான அசைவுக்கோலங்களைச் சேகரித்தலும், ஒழுங்கமைத்தலும் ஆக்கச் செயற்பாட்டில் இடம்பெறுகின்றன.

எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசையமைப்பாளர்கள் போன்று ஆடலியற்றுனரும் அவர்களால் உருவாக்கப்படும் படைப்புக்களுக்கு ஆசிரியராகும் உரிமையைப் பெறுகின்றனர். அந்தப் படைப்புக்கள் அவர்களுக்குரிய தனித்துவமான உரிமை நிலையைப் பெறுகின்றன. சமகாலத்தைய மேலைப்புலத்து அரங்க ஆடல்கள் அனைத்தும் ஆடல் இயற்றுனரால் ஆக்கப்பட்டவையாகும்.

பரதநாட்டியத்திலே புதிய உருப்படிகளைத்தெரிவு செய்து அவற்றுக்குரிய ஆடலை வடிவமைக் கின்றனர். அவ்வாறு செய்யும் பொழுது பரதநாட்டிய மரபுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்படுகின்றது. மரபு வழியாக உருவாக்கப்பட்ட அடைவுகளையும் முத்திரைகளையும் தெரிந்தெடுத்து இணைத்தலே அங்கு மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் அவ்வாறான வரையறைகளையும் மீறிய எண்ணக்கருவாக ஆடல் இயற்றலியல் என்பது மேலைப்புலத்தில் விளங்குவதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

காலங்காலமாக ஆடல்கள் கையளிக்கப்பட்டு வரும் பொழுது அவற்றிடையே திரிபுகள் ஏற்பட்டு, சிலவகையான புதிய எழுகோலங்கள் அல்லது பாணிகள் உருவாக்கம் பெறலாம். அவ்வாறான பகுதிநிலை மாற்றம் (partial Change) என்பது குறித்த ஆடலின் அடிப்படைகளை மீறி எழுதல் இல்லை. அரிசோனாவின் வடபகுதியிலே வாழும் கோபி இந்தியர் (Hopi Indians) என்ற பழங்குடியினர் அவ்வாறு மாற்றங்கள் செய்வோரின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்வதில்லை. பரதநாட்டிய மரபிலும் புதிய முத்திரைகளோ அல்லது அடைவுகளோ ஏற்றுக்கொள்ளப்படுதல் இல்லை.

மேலைப்புலத்து ஆடலியற்றுனர் பொதுவாகப் புதிய வகைகளை உருவாக்கும் கற்பனைகளை முன்னெடுக்கின்றனர். உடலசைவுகளின் புதிய நீட்சிகள் பற்றிச் சிந்திக்கின்றனர். பழைய மரபுகளில் மாற்றங்களையும் மீள் அதிர்ச்சிகளை உருவாக்குகின்றனர். வேறு வேறுபட்ட களங்கள், தளங்கள், ஆடை அணிகலன், இசை மற்றும் கருவிகளின் உட்புகுதல்களை முன்னெடுக்கின்றனர். அசையும் தளத்தில் ஆடலை நிகழ்த்துதல், ஊர்ந்து செல்லும் பொருள்களின் மேலிருந்து ஆடுதல் போன்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் ஆடல் இயற்றலியலில் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றை அடியொற்றி "ஆடலியற்றற் கற்பனை" என்ற அழகியல் எண்ணக்கருவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலங்களிலே ஆடலியற்றலியலிலே சில தில்லுமுல்லுகளும் இடம்பெற்றன. கூட்டுச் செயற்பாடுகள் சிதைந்து தனியுரிமை வளர்ச்சியடைந்தமையே அதற்குரிய அடிப்படைக் காரணமாயிற்று. 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளிலே இத்தாலிய அரச அவையிலிருந்த ஆடல் ஆசிரியர்கள் மரபுவழி ஆடல்களிலே சிலமாற்றங்களைச் செய்துவிட்டு தம்மாலேதான் அது உருவாக்கப்பட்டன என்ற ஆடல் ஆவணங்களை வெளியிட்டனர்.

மேலைநாடுகளில் இன்று ஆடலியற்றுவோர் தமது உளக்கோலங்களுக்கும் மனவெழுச்சிகளுக்கும் ஏற்றவாறு புதிய புதிய ஆடற் கோலங்களை உருவாக்குவதிலே தீவிர முனைப்புடன் செயற்படுகின்றனர். தமது உள்ளத்திலே தோற்றம் பெறும் எழுகாட்சிகளை அடியொற்றி புதுவகையானஅசைவுகளையும் படிமங்களையும் உருவாக்குகின்றனர். ஏற்கனவே பழக்கப்பட்ட அசைவுகளில் இருந்தும் முத்திரைகளிலிருந்தும் விடுதலை காணலை முக்கியப்படுத்துகின்றனர்.

அவர்களாற் கூர்ந்து கவனம் செலுத்தப்படும் ஒரு துறையாக "ஆடல் தொடர்" (Pharase) விளங்குகின்றது. உடல் வலுநீட்சியில் உருவாக்கப்படும் அசைவுகளின் தொடர்ச்சி "ஆடல் தொடர்" என்று பொதுவாகக் குறிப்பிடப்படும். ஆடல் தொடருக்குத் தொடக்கமும் முடிவும் உண்டு. ஒரு வகையிலே பரதநாட்டியத்திலே குறிப்பிடப்படும் கோர்வைக்கும் (கோவை) இந்த எண்ணக்கருவுக்கும் தொடர்பு உண்டு. ஆடல் தொடரிலே ஒரு தருக்க நிலை இணைப்பானது அசைவுகளிலே காணப்படும். ஆனால் எழுந்தமான நிலை அசைவுகளிலே அவ்வாறான ஒரு தருக்க இணைப்பைப் பொதுவாகக் காணமுடியாது. உடல் விசையும் கால அளவும் ஆடல் தொடரிலே திட்டமிட்டு அமைக்கப்படும்.

ஆடல் தொடர் மீள மீள ஒப்புவிக்கப்படும் பொழுது அவற்றிலே பொருந்தமான மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆடல் இயற்றுனர் உருவாக்கிக் காட்டுவார். யாழ்ப்பாணத்துக் கிராமிய ஆடல்களில் அவ்வாறான செயற்பாட்டை "புதுச் செருகல்" என அண்ணாவிமார் குறிப்பிடுவர்.

ஆடல் என்பது எளிமையான அசைவுகளில் இருந்து நன்கு வடிவமைக்கப்பட்ட வரன்முறைப்பாடுகளுக்கு உட்பட்ட அசைவுகள் வரை வளர்ந்து செல்லும். தற்காலத்து இராணுவ அணி நடை அசைவுகள் கூட ஆடலின் காற்கோலங்களில் இருந்து எடுக்கப்பட்டவை என்ற கருத்து உண்டு.

விளையாட்டுக்களின் போது நிகழ்த்தப்படும் உடலசைவுகளிலும் தன்னிலை வெளிப்பாடு, மனவெழுச்சிக் கோலங்கள் அழகியற் பண்பு முதலியவை காணப்படுவதால் ஆடலையும் விளையாட்டு உடற்கோலங்களையும் வேறுபடுத்தல் கடினம் என்ற கருத்து ஆடல் இயற்றுனர்களிடத்துக் காணப்படுகின்றது. நுண்ணியதான முறையில் அவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுவதனால் விளையாட்டுக்களின் அசைவுகள் வெற்றியின் அடைவுகளை நோக்கி நிகழ்த்தப்படும். ஆனால் ஆடலின் அசைவுகள் அழகியல் நோக்கில் நிகழ்த்தப்படும்.

ஆனால் மேற்குறிப்பிட்ட வேறுபடுத்தலும் பிரச்சினையை எதிர்கொள்கின்றது. ஏனெனில் சமகாலத்தைய பனிச்சறுக்கல் விளையாட்டில் அழகியல் பண்புக்கும் முன்னுரிமையளிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர்களிடமும் காணப்படும் ஒரு சிறப்பியல்பு தீவிரமான திறனாய்வு அணுகுமுறையினைக் கொண்டிருத்தலாகும். இந்திய மரபில் நடன ஆசிரியர்கள் தம் முன்னோர் வகுத்த ஆடற்கோலங்களை எதுவித திறனாய்வுமின்றிப் பின்பற்றும் அறிகை மரபைக் கொண்டுள்ளனர். அவ்வாறு திறனாய்வு செய்தல் கலைக்கு இழைக்கப்படும் துரோகமாகக் கருதுகின்றனர்.

மேலைப்புலத்துக் கல்வியினூடே வளர்ச்சியுற்ற திறனாய்வு மரபு அனைத்துத்துறைகளிலும் விரைவில் பரந்துள்ளது. விஞ்ஞானக் கோட்பாடுகளிலே காணப்பட்ட "பொய்யுரைப்பை (Falcification)க் கண்டறிதலினால் அறிவியல் விரைந்து வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கது. பெரும் அங்கீகரிப்புக்க உட்பட்ட 'பலே' ஆடல்களில் இடம்பெற்ற அழகியல் ஆட்சியை மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர் திறனாய்வுக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அந்தச் செவ்வியல் ஆடல் தொடர்பாக அவர்கள் முன்வைத்த முக்கியமான திறனாய்வக் கருத்துக்கள் வருமாறு.

(அ) அங்கு ஆடல் இடம்பெறவில்லை. மாறாக வெற்று நிலைச் சாகசங்களே(Acrobatics) இடம்பெற்றிருந்தமை.

(ஆ) தனியொரு ஆட்டக்காரரின் திறன்களுக்கே அங்கு முக்கியத்துவமும் குவிப்பும் வழங்கப்பட்டிருந்தமை.

(இ) குறித்துரைக்கப்படும் கருத்தையோ மனவெழுச்சியினையோ வெளிப்படுத்துவதற்கு அவை தவறிவிடுகின்றன.

செழுமையும் செம்மையும் பெற்றுச் செவ்வியல் நிலையில் மேலெழுந்தபலே ஆடலை மேலைப்புலத்து ஆடல் இயற்றுனர் திறனாய்வுக்கு உட்படுத்தி அதன் மட்டுப்பாடுகளை வெளியிட்டமை உலக ஆடல் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

திறனாய்வை மேற்கொள்ளலும் மட்டுப்பாடுகளை வெளிக்கொண்டு வருதலும் என்ற ஆடல் இயற்றுனரின் செயற்பாடுகள் நவீன ஆடல் வகைகளை உருவாக்குவதற்கு விசையும் பலமும் வழங்கின.

அந்தவகையில் உருவாக்கம் பெற்ற ஓர் ஆடல் வடிவமே அவன்காட் (Avant Garde) என்ற ஆடல் வடிவமாகும். அதனோடிணைந்த் பல புதிய வடிவங்களும் பிரவாகமெடுத்து வருகின்றன.

ஆடல் தொடர்பான ஒரு பிரதான கருத்து மோதல் மேலைப்புலத்து ஆடல் இயற்றுனரிடத்து இன்று நிலவி வருகின்றது. வெளியீட்டு எழுகை (Expression) என்பதை அடியொற்றிக் கருத்து மோதல் நிகழ்கின்றது. ஒருசாரார் ஆடலின் மரபு வழியான வரன்முறைப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்கும், ஆடல்திறன்களுக்கும் அதன் வழிநிகழும் நாடக ஆக்கத்துக்கும் முதன்மை வழங்குகின்றனர். அதனை மறுப்போர் வரன்முறைகள் முக்கியமல்ல என்றும் ஆடலின் வழியாகக் கையளிக்கப்படும் மனவெழுச்சிகளும், உணரச்சிகளும், எடுத்துரைப்பு வினைச் செயல்களுமே (Narrative Actions) முக்கியமெனவும் வலியுறுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் புகழ்மிக்க ஆடல் இயற்றுனரும் ரூசிய நாட்டைச் சேர்ந்தவருமான மிசேல்போக்கின் ஆடலின் எடுத்துரைப்பு வினைச் செயல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

மரபும் வரன்முறைப்பாடும் என்ற குறுகிய வட்டத்திலிருந்து ஆடல் வெளிவரவேண்டும் என்ற கருத்தை 'பலே' ஆடலை முன்னிறுத்தி அவர் வெளியிட்டார்.

சிறுபிள்ளைத்தனமான கற்பனைகளும் மிகவும் செயற்கையான வரன்முறை வெளியீட்டுக் கட்டமைப்பும் செவ்வியற் பண்பு கொண்ட பலே ஆடலிலே காணப்படுதலை நவீன ஆடல் இயற்றுனராகிய மர்தா கிராகாம் சுட்டிக்காட்டியுள்ளார். நவீன உலகின் சிக்கல்களையும் ஒடுக்குமுறைகளையும் போர் வடுக்களையும் உளவியல் நெருடல்களையும் கூர்ப்பிடும் மனவெழுச்சிகளையும் காட்டுவதற்கு மரபு வழியான பழைய ஆடல் வரன் முறைப்பாடு ஈடுகொடுக்கமாட்டாது என்பது அவரின் பலத்த ஒலிப்பாகவுள்ளது.

அந்நிலையிலே பழையமையான செவ்வியல் ஆடல்கள் தொல்பொருட்காட்சியகத்துக்குப் பொருள்களாக மாறிவிடுகின்றன.

**உருவகக் கதை**

# தாபம்

காலநிலைவரட்சியால் காட்டாறுவற்றிப் போய் மணல் வார்த்துக் காய்ந்து கிடந்தது. கனநாட்களாகக் கடல் காதலனைக் காணாத ஏக்கமும் ஆற்றை வாட்டி வதைத்தது. கடல் காதலனும் தன்னைத் தேடிவரவில்லையே என்றகவலைவேறு. எனினும் கடலின் மீதான தனது காதலில் கொண்டிருந்த நம்பிக்கையும் வைராக்கியமும் அனுவளவும் குறையாது ஆற்றின் மனதை ஆக்கிரமித்திருந்தன.

வானம் வழங்காததால் ஆற்றுக் காதலி வரவில்லையே என்று தனியே தாபத்தில் தவித்துக் கிடந்த கடல் வாளாவிருக்கவில்லை.

சூரியவெப்பத்தில் தனது மேற்பரப்பைச் சூடேற்றி நீரை ஆவியாக்கி ஆற்றை அழைத்து வரும்படி தூது அனுப்பியது.

நீராவி மேலெழுந்து முகில் கூட்டங் களாகி வானில் உலாவந்தது. பருவப் பெயர்ச் சிக் காற்றுசாதகமாக வீசத் தொடங்கியதும் குளிர்ந்துமழையாகக் கொட்டத் தொடங்கிற்று. மெலிந்து கிடந்த ஆறு மேனிசிலிர்த்தது. வற்றிக் கிடந்த நிலை மாறி வயிறு புடைத்து வழிந்தது. கடல் காதலன் தன்னைத் தேடி வரவில்லையே என்று ஊடிக் கிடந்த ஆற்றுநங்கை ஊடல் களைந்து கடல் காதலனை நோக்கிக் கரங்களை நீட்டினாள்.

ஆம்! தூது சென்ற கடல் நீராவி மழை யாக மாறி ஆற்று நங்கையை அழைத்து வந்தது.

நீர் நிரம்பிய ஆறு நில்லாமல் ஓடிச் சென்று கடலோடு கலந்தது. கடலும் தன் அலைக் கரங்களால் ஆற்றுநங்கையை ஆரத்தழுவி ஆர்ப்பரித்தது. ஊடிக்கிடந்த ஆறும் தாபத்தில் தவித்துக் கிடந்த கடலும் கழிமுக அந்தப் புரத்தில் கூடி முயங்கின.


– செங்கதிரோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்பத்தேழு வயதிலும் மனிதநேய எழுத்துப்பணி துறக்காதவர்

எம்.கே.முருகானந்தம்



எழுத்தாளர்கள் ஏன் எழுதுகிறார்கள்? தமது ஆத்ம திருப்திக்காக எழுதுபவர்கள் பலர் இருக்கிறார்கள். தாங்கள் கொண்ட இலட்சியத்தை மக்களிடையே பரப்ப வேண்டும் என்பதற்காக எழுதுபவர்களும் இருக்கிறார்கள். சமூகத்தில் தனது அடையாளத்தை பதிக்க வேண்டும் என்பதற்காக எழுதுபவர்களும் இருக்கிறார்கள்.

எல்லோரும் எழுதுகிறார்களே நானும் முயன்று பார்க்கலாம் என முயற்சிப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். பலரும் இவ்வாறான எண்ணத்துடன் எழுத்துத்துறைக்குள் நுழைகிறார்கள். ஆனால் கால வெள்ளத்தில் பொறுப்புணர்வு அதிகரித்து, சமூக அக்கறையும் மேலோங்க அவர்களது பார்வை விரிவடைகிறது.

'நாம் ஏன் எழுதுகிறோம்' என்று தனது எழுத்துலகப் பாதையை வெளியுலகிற்கு துல்லியமாக வெளிச்சம்போட்டுக் காட்டி எழுதுபவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்க முடியும். உள்ளத்தில் கள்ளமில்லாத படைப்பாளியால்தான் அவ்வாறு எழுத முடியும்.

அண்மையில் 87 வயதை எட்டிய ஒருவர் தனது இளமைப் பருவம் முதல் கடந்த சுமார் 6 தசாப்தங்களாக கொள்கைப் பிடிப்போடு சிறுகதைகளைப் படைத்து வருகிறார். கலைத்துவமாகவும் வாசகர்களுக்கு பயனுள்ளதாக சிறப்பாகவும் எழுதி வருகிறார். அடக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும் அவரது படைப்புகள் குரல் கொடுக்கின்றன. முற்போக்கு இலக்கியத்தில் அவருக்கெனத் தனியிடம் உண்டு. இலங்கையின் பெரும்பாலான பத்திரிகைகள் அவரது படைப்புகளை விருப்போடு பிரசுரிக்கின்றன. வாசகர் மட்டத்திலும் எழுத்தாளர் மத்தியிலும் மதிக்கப்படுபவர். ஆயினும் இன்றுவரை அவருக்கு இலங்கைத் தேசிய சாஹித்தியப் பரிசு கிடைக்கவில்லை.

இவரது முதல் சிறுகதைத் தொகுதி 1961 ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதியாக அவ்வாண்டின் நடுவர் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் அன்றைய சாஹித்திய குழுத் தலைவரான ஒரு பேராசிரியர் 'சிறுகதை என்பது ஒரு இலக்கிய வடிவம் அல்ல அதற்குப் பரிசு கொடுக்க வேண்டியது அவசியமில்லை' எனத் தடுத்துவிட்டதாகத் தெரிகிறது.

அந்த ஒரே ஒரு வருடம் மட்டும் சிறுகதைக்கென சாஹித்தியப் பரிசு வழங்கப்படவில்லை. இதனால் சிறந்த சிறுகதைத் தொகுதியாக பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பரிசு கிடைக்காமல் போய்விட்டது. இது ஆச்சரியமான செய்தி மட்டுமல்ல. பரிசளிப்புகளின் போது திறமைகளைவிட வேறு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன, தனிப்பட உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகளுக்கும் குறைவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பரிசுகளைத் தேடி ஒருபோதும் ஓடியதில்லை. முற்கூறிய சாஹித்திய மண்டலம் உட்பட எந்தப் போட்டிக்கும் தனது நூலை அனுப்பியதில்லை.

'ஒரு எழுத்தாளனுக்கான அங்கீகாரம் மக்களிடம் இருந்தே வரவேண்டும். பாரதிக்கும் கார்க்கிக்கும் யார் பரிசு கொடுத்தார்கள்' எனக் கூறி போட்டிகளையும் பரிசுகளையும் நிராகரிக்கிறார் அவர். இருந்தபோதும் கொழும்பு பல்கலைக் கழகம் 1998 லும், பேராதனைப் பல்கலைக்கழகம் 2009லும் அவரது படைப்புப் பணிகளைச் சிலாகித்து இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கத் தவறவில்லை.

அவர்தான் **நீர்வை பொன்னையன்.** சிறந்த தொகுப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பரிசு பெறாத சிறுகதைத் தொகுதி 'மேடும் பள்ளமும்' ஆகும்.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இல்லாமை இல்லாது ஒழிய வேண்டும் என்ற மனிதநேயக் கொள்கையை தனது கல்விப் பிராயத்திலேயே வரித்துக் கொண்டவர் அவர். தனது ஊரில் ஆரம்பக் கல்வியைப் பெற்றாலும் பட்டப் படிப்பை மேற்கொண்டது வங்காளத்தில். போராட்ட உணர்வும் முற்போக்குக் கொள்கைகளும் இவரது உள்ளத்தில் பதிவதற்கு அங்கிருந்த சூழலும் முக்கிய காரணங்கள் ஆகின.

இளமைப் பிராயத்திலேயே முற்போக்கு எண்ணங்கள் தனதுள்ளத்தில் ஆழப் பதிந்த அவர் தான் கொண்ட இலட்சியத்தை மக்களிடையே பரப்ப வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறார். எழுத்து இவரைப் பொறுத்த வரையில் ஒரு சமூகப் பணி. தன்னை ஒரு சமூகப் போராளியாகவே மாற்றிக் கொண்டார். சாதி, மதம், பிரதேசம், பொருளாதாரம் ஆகியவற்றின் பெயரால் ஒடுக்கப்படும் சகல மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து தன் எழுத்தாணியை கூர்மையாகப் பயன்படுத்துகிறார்.

மண்ணின் மீது பற்றுக் கொண்டவர் இவர். இதனால் தனது பிறப்பிடமான நீர்வேலியை தனது பெயரோடு நீர்வை என இணைத்து கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் தான் நிற்கிறேன் என்பது தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காக பொன்னையா என்ற தனது பெயரையே பொன்னையன் எனச் சுருக்கிக் கொண்டவர். இருந்தபோதும் நீர்வை பொன்னையனான அவர் நண்பர்கள் பலருக்கும் நீர்வை மட்டுமே.

நீர்வை பிரதானமாக ஒரு சிறுகதைப் படைப்பாளி. இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை அவர் எழுதியபோதும், அவற்றில் சில 'நாம் ஏன் எழுதுகிறோம்' என்ற கட்டுரைத் தொகுப்பாக வெளிவந்தபோதும், அவர் தன்னை சிறுகதையாளனாகவே முனைப்புப் படுத்தியுள்ளார்.

ஈழத்து முற்போக்கு சிறுகதை எழுத்தாளர்களின் மூத்த தலைமுறையைச் சார்ந்த இவரது ஆரம்பகாலப் படைப்புகளே மிகுந்த கலைத்துவம் மிக்கவையாக அமைந்தது ஆச்சரியம்மிக்கது. இவரொத்த பலரும் சூழலுக்கு ஒவ்வாத நிகழ்வுகள் கொண்ட, கற்பனை வரட்சியான, பிரச்சார வாசனையால் வெறுக்க வைக்கும், கலைவரட்சியுடனான போர்மிலா ரீதியான கதைகளாகக் கட்டிக்கொண்டிருந்த நேரத்திலேயே மண்மணம் மிக்க கலைத்துவப் படைப்புகளைத் தந்துள்ளார்.

எமது நாடு ஒரு விவசாய நாடு. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் சொந்தக் காணியற்றவர்கள். குத்தகைக் காணிகளில் பயிர் செய்பவர்கள். வயல்கள் மாத்திரமின்றித் தோட்டப் பயிர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாடெங்கும் செழித்திருந்தன. ஆனால் விவசாயிகள் வறுமையில் வாடினர். இவர்களைப் பற்றி தமது படைப்புகளில் பேசாது கற்பனையான தொழிலாள வர்க்கப் பிரச்சினைகள் பற்றி பெரும்பாலான முற்போக்கு எழுத்தாளர்கள் பேசிக் கொண்டிருந்தபோது நீர்வை மட்டும் விவசாயிகள் பிரச்சனையை தனது படைப்புகளில் முதன்மைப்படுத்தினார். குடாநாட்டு விவசாயிகளைப் பற்றி மட்டுமின்றி வன்னிப் பிரதேச விவசாயிகள் பற்றியும் ஆரம்ப காலம் முதல் எழுதத் தவறவில்லை.

முக்கியமாக 'மேடும் பள்ளமும்' என்ற இவரது முதற் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் கிராமிய மணம் ரம்யமானது. அத்துடன் பல்வேறுவிதமான பாணியில் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைநேர்த்தியில் அவை மிகத் தேர்ந்தவை.

வங்காளத்தில் படிக்கும்போது மாணவர் எழுச்சிப் போராட்டங்களில் பங்கு பற்றியதால் அடக்குமுறை எதிர்ப்பு, மக்கள் எழுச்சி, போராட்டம், போன்றவற்றில் பரந்த அனுபவம் கிட்டியது. அத்துடன் அங்கு கற்கும் காலத்தில் ஆங்கிலம் முதல் இந்தியாவின் பல்வேறு மொழி இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியதாலும் இவருக்கு நவீன இலக்கியங்களுடனான பரிச்சயம் கிட்டியது. இவற்றின் ஊடாக படைப்புகளில் கருத்தாளம் இருக்கும் அதே நேரம் உருவ நேர்த்தியும் கலையழகும் சேர்ந்திருக்க வேண்டியதின் அவசியத்தைப் புரிந்திருக்கிறார். இதனால்தான் நீர்வையால் தனது சமகால எழுத்தாளர்கள் பலருக்கும் இல்லாதவாறு சிறுகதைப் படைப்பின் சூட்சுமம் பிடிபட்டிருக்கிறது. யதார்த்தம், நனவோடை, குறுங்கதை போன்ற மாறுபட்ட வடிவங்களை பரீட்சித்து அவற்றில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

கல்வி கற்று இலங்கை திரும்பிய நீர்வை தீவிர அரசியல் ஈடுபாடு கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். முழு நேர அரசியல் பணியாளராக இருந்ததால் தொழிலாளர்களுடனும், உழைக்கும் மக்களினதும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்களது பிரச்சினையை அனுபவபூர்வமாக அறிந்தார். அவர்களது பிரச்சினைகளுக்காக அவர்களுடன் இணைந்து போராட்டங்களில் பங்கெடுத்தார். இதனால் இவர் எழுதிய கட்சி அரசியல் சிறுகதைகளிலும் செயற்கைத்தன்மை இருக்கவில்லை. பிரச்சார வாடை அவற்றில் இருந்தபோதும் பட்டறிவும் அனுவமும் இணைந்ததால் அவற்றில் உண்மைத்தன்மை வெளிப்பட்டது.

இவர் அதிகம் எழுதுபவரல்ல. இதுவரை சுமார் 70-80 சிறுகதைகள் மட்டுமே எழுதியுள்ளார். மேடும் பள்ளமும், உதயம், பாதை, ஜன்மம், வேட்கை, நீர்வை பொன்னையன் சிறுகதைகள், நிமிர்வு ஆகியன இவரது ஏழு சிறுகதைத் தொகுப்புகளாகும்.

இவரது படைப்புகளின் சிறப்பு அம்சங்கள் என்ன என யோசிக்கும்போது பல விடயங்கள் முக்கியமாகப் படுகின்றன. நீர்வையின் படைப்புகள் கருத்தாளம் நிறைந்தவை. எப்பொழுதும் அவை சமூகத்திற்கு வழிகாட்டக் கூடிய அவசியமான கருத்துக்களை முன்வைப்பவையாக இருக்கும். தேர்ந்தெடுத்த சொற்கள், சுருக்கமான வசன அமைப்பு, தெளிவான நடை, உரையாடல்கள் ஊடாக கதை சொல்லும் பாணி, சிறப்பான முடிவு, செறிவான குறும் தலைப்புகள் எனப் பலவாகும்.

பல்வேறு வித்தியாசமான வடிவங்களில் கதை சொல்லும் கலையை நீர்வை பரீட்சித்திருக்கிறார். இவற்றில் பல அவரது படைப்புலகின் ஆரம்ப கட்டங்களில் இடம் பெற்றன. தனக்கென ஒரு பாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியதும் அதன் வழியிலேயே நீண்ட காலம் பயணித்தார். ஆயினும் அண்மைக் காலங்களில் அதன் வடிவம் சார்ந்த மற்றொரு புது முயற்சியில் இறங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. கதை முழுவதையும் தனித்தனி வாக்கியங்களாக பந்தி பிரிக்காமல் எழுதி வருகிறார். சிறிய வசனங்கள். கவிதையாக இல்லாமல் அதே நேரம் புதுக்கவிதை போன்ற தோற்றத்துடன் படைக்கப்படுகின்றன. அண்மையில் வெளிவந்த 'நிமிர்வு' தொகுதியில் இத்தகைய படைப்புகளைக் காண்கிறோம்.

ஏற்கனவே குறிப்பிட்ட 'நாம் ஏன் எழுதுகிறோம்' என்பது இவரது கட்டுரைத் தொகுதியாகும்.

'உலகத்து நாட்டார் கதை' என்பது இவரால் மீள மொழியப்பட்ட நாட்டார் கதைத் தொகுப்பு. உலகின் பல்வேறு பகுதிகளிலும் வழக்கிலுள்ள நாட்டார் கதைகளின் தொகுப்பு இது பல பதிப்புகள் கண்ட ஒரு சிறந்த நூலாகும்.

விபவி கலாசார மையத்தின் தமிழ் மொழி இணைப்பாளராக நீண்ட காலம் கடமையாற்றியதுடன், 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்ற'த்தின் முக்கிய அங்கத்தவராகவும் செயற்படுகிறார். ஆயினும் தாய்ச் சங்கமான 'முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்ப காலம் முதல் அதன் செயற்பாடுகளில் முக்கிய பங்கெடுத்தவர். அதன் வளரச்சிக்கு உதவியவர். அதன் மகாநாடுகள் சிறப்பாக நடைபெற முக்கிய பணியாற்றியவர்.

அவ்வாறு இருக்க எதற்காக இப்பொழுது 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்' எனப் பிரிந்து நின்று செயற்படுகிறீர்கள் எனக் கேட்டபொழுது, "முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயலிழந்து போய் பல வருடங்களாகிறது. அதற்கு புத்துயிர் கொடுக்க பல முயற்சிகள் செய்தும் முடியாமல் போயிற்று. அதன் நீண்ட காலச் செயலாளரான பிரேம்ஜி கனடாவிலிருந்து வந்து முயன்றும் முடியாமல் போயிற்று. எனவே முற்போக்கு கருத்துகளை உடைய படைப்பாளிகளை ஒன்று சேர்த்து பணியாற்ற வேண்டியது காலத்தின் தேவையாக இருந்தது" என்கிறார்.

"சிறுகதை, கவிதை நூல் வெளியீடுகளுக்கு அப்பால், மூத்த முற்போக்கு சிறுகதையாளர்களையும் கவிஞர்களையும் இன்றைய சமுதாயத்தினருக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் தொகுப்பு நூல் வெளியீடுவது, தோழர் கார்த்திகேசன், பேராசிரியர்.க.கைலாசபதி போன்றோரது நினைவுச் சொற்பொழிவுகள் நடாத்துவது, இலக்கியச் செல்நெறிகள், இலங்கையின் கல்வி முறை, சூழலியல், சேதுசமுத்திரத் திட்டம், புவிவெப்பமடைதல், உலகமயமாதல் போன்ற சமூதாய மேம்பாடு நோக்கிய விடயங்களில் கருத்தரங்குகளும் நூல்வெளியீடுகளும் என இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறது." என அதன் செயற்பாடுகளை விளக்கினார்.

இவர் பிறந்தது 1930 ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதியாகும். யாருக்கும் தெரியாமல், எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி அவரது 87வது பிறந்த தினம் கடந்த மார்ச் மாதத்தில் கடந்துவிட்டது. மணிவிழா, பவளவிழா என எழுத்தளார்கள் பலரும் (நான் உட்பட) தம்மை வெளிச்சம் போட்டுக் காட்டும் எழுத்து உலகில் இவர் வித்தியாசமானவர். தன்னை முதன்மைப்படுத்தாதவர். கொள்கைகளுக்காக வாழ்பவர்.

வயதில் முதிர்ந்தாலும் சோர்வின் சாயல் படியாது. இளமைத் துடிப்புடன் இன்றும் தொடர்ந்து செயற்படும் நீர்வை பொன்னையன் பல்லாண்டு காலம் வாழ்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட வேண்டி வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிர் சிறுகதை

வ.கலைச்செல்வி

# யார் புத்திசாலி?

கந்தன் என்ற ஏழைச் சிறுவன் ஒருவன் சோலையூர் கிராமத்தில் வசித்து வந்தான். அவன் ஒரு அப்பாவி. யார் என்ன சொன்னாலும் நம்பி விடுவான். ஆனால் அவன் ஒருவரையும் ஏமாற்ற மாட்டான். அவனுடைய அப்பாவித்தனத்தைப் பார்த்த அவ்வூர் மக்கள் அவனிடம் வேலை வாங்குவார்கள். ஆனால் கூலி எதுவும் கொடுக்க மாட்டார்கள். உண்ண உணவு மட்டும் கொடுப்பார்கள். அவ் உணவு அவனுடைய வயிற்றுக்கு போதா நிலை. கந்தன் எதுவும் கூறாமல் தந்ததை வாங்கி உண்டு செல்வான்.

இதைப்பார்த்த அவ்வூரில் வாழ்ந்த பரமன் " நீ அவர்களிடம் கூலி என்று நிர்ணயம் செய்து வேலை செய்யலாமே" என்று கூறினான். அதற்கு கந்தன் அவர்களுக்கு என்று ஒரு மனச்சாட்சி உண்டு. அதன்படி அவர்கள் நடந்துகொள்வார்கள். நான் கூலி கேட்காமல் மனச்சாட்சியின்படி நடந்து கொள்வேன். நான் கடவுளை நம்புகிறவன். அவர் எல்லாம் பார்த்துக்கொள்வார். என்னை ஏமாற்றினால், எனக்கு கெடுதல் செய்தால் நிட்சயம் கடவுள் அவர்களை தண்டிப்பார் என்று அடக்கத்துடன் பதில் அளித்தான். பரமனோ! நீ ஒரு வடிகட்டின முட்டாள்" இந்தக் காலத்தில் இது எல்லாம் நடக்குமா? நீ வெளிப்படையாக ஊதியத்தைக் கேள்" என்று கூறிப் போனான். கந்தனுக்கோ பரமன் தன்னை ஒரு முட்டாள் என்று கூறிய போது கோபம் வந்தது. ஆனால் அதனை காட்டிக் கொள்ளாது நான் அறிவாளி என்பதை இவனுக்கு வேறொரு விதத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று மனதில் திடசங்கற்பம் பூண்டான்.

ஒரு நாள் அடுத்த கிராமத்தில் வயலில் வேலை செய்ய ஆட்கள் தேவை என்று கூறினார்கள். அதன்படி கந்தனும் பரமனும் அடுத்த கிராமத்திற்கு வயலில் வேலை செய்வதற்காகச் சென்றார்கள். வயலில் வேலை செய்த களைப்பின் காரணமாக பக்கத்திலுள்ள மரநிழலில் சற்று இளைப்பாறினார்கள். சில நிமிடம் கந்தன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். பரமன், என்ன வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்" என்று வினாவ அதற்கு கந்தன் "வானத்தில் குருவிக் கூட்டம் செல்கிறது. பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கிறது. ஒரு நூறு குருவிகள் ஆக இருக்கும்." என்றான். அதற்கு பரமன் இல்லை அதைவிட கூடுதலாக இருக்கும் என்றான். இதைக் கேட்ட குருவிகள் இல்லை இல்லை நாங்களும், எங்களில் நாங்களும், எங்களில் பாதியும், பாதியில் பாதியும் நீயும் சேர்ந்தால் தான் நூறு வரும். அப்போ நாங்கள் எவ்வளவு பேர் பறந்து செல்கிறோம் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றன.

பரமனுக்கோ எதுவும் புரியவில்லை. ஆனால் கந்தன் யோசித்தான். தான் புத்திசாலி என்பதை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதை தவறவிடக் கூடாது என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

பரமனோ இவன் ஒரு முட்டாள் எங்கே பதில் கூறப்போகிறான் என்று மனதில் நினைத்துக் கொண்டான். ஆனால், கந்தனோ கடுமையாக குருவி சொன்ன விடயங்களை வைத்து சிந்தித்து கடைசியில் பரமனிடம் கூறினான் "குருவி கேட்ட கேள்விக்கு நான் பதில் கூறுகின்றேன்". பரமனோ, ஏளனமாகச் சிரித்தான். கந்தன் அதைப் பொருட்படுத்தாது கூறத் தொடங்கினான். கந்தன் பதில் கூறுகையில் 36 குருவிகள் வானத்தில் பறந்து செல்கின்றன. அது எப்படி? விபரமாக கூறு பார்க்கலாம்? என்று பரமன் கேட்டான். கந்தன் விபரமாக கூறினான். அதவாது குருவி கூறியதன்படி

| | | |
|---|---|---|
| நாங்களும் | - | 36 |
| எங்களில் நாங்களும் | - | 36 |
| எங்களில் பாதியும் | - | 18 |
| பாதியில் பாதியும் | - | 09 |
| நீயும் | - | 01 |
| மொத்தம் | - | 100 |

ஆகவே 36 குருவிதான் வானத்தில் பறந்து செல்கின்றது என்றான். இதைக்கேட்ட குருவிகள் சரியான விடை என்று கூறிக் கொண்டு பறந்து சென்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோவின் கவிதைகள்

மாசேதுங்கைப் பலருக்கும் இவரை ஓர் அரசியல்வாதியாக, சீனப் பெருந்தலைவராகவே தெரியும். ஆனால் அவருக்குள் 'கவிஞர்' என்கிற ஓர் முகமும் இருந்து வந்துள்ளது. மாவோவின் கவிதைகள் எளிமையும் மண்ணின் மணமும் நேரடித்தன்மையும் மிக்கன.



## பூத்துக் குலுங்கும் மஞ்சள் மலர்கள்!

மனிதனைப் போல இயற்கை
அத்தனை வேகமாய் முதுமையடைவதில்லை!
பருவ காலங்களின் சுழற்சியில்
ஆண்டு தோறும் வசந்தம் வருகின்றது!
இப்போதும், வசந்தம் வந்துவிட்டது.
போர்க்களத்தின் மேலே - ஆகா!
மஞ்சள் மலர்கள் எத்தனையழகாய்(ப்)
பூத்துக் குலுங்குகின்றன....!

இலையுதிர் காலமும் ஆண்டு தோறும்
எப்படியும் வந்து சேர்கிறது...
பெருங்காற்று வீசுது பாருங்கள்...
வசந்தகாலத்தைப் போலின்றி
எங்கும் வெளிச்சமயமாய்.
எல்லையற்ற வானும், நீரும்
முடிவற்ற எதுகை மோனையில்
கரைந்து போய் விடுகின்றன....

## உலகம் அவனுக்குத் தூசு...!

காரணமின்றி எனது கவலை
வானம் முழுவதும் பரவுகிறது....!
நல்லவேளை, கீழைக்காற்று வீசுகிறது...
தொலைதூரத்து நிலங்கள் வரை
மனச்சுமை சிந்தனையை அழுத்தி
மனிதனைக் கூசச் செய்யும்...
ஆயினும் இவ்வுலகம் அவனுக்குத்
தூசுதான் போங்கள்!

உடல்நலம் பேணிவா, உனது மனம்
பரிசுத்தமாய், இலகுவாய் இருக்கட்டும்.
சூரியனும், நிலாவும் உன்மனதில்
புத்தொளி பொழியட்டும் இதமாய்.
உயர் புகழ் ஒரு போதும் நிலைக்காது...
உயர்ந்த பட்சம் ஐநூறு ஆண்டுகளே!
இரண்டாந்தரங்கள் ஒரு போதும் தங்களைப்(ப்)
பெருமைப் படுத்திக் கொள்ள முடியாது...

அலைகளின்முன் அரண்மனை முன்
நட்புப் புன்னகை தோன்றுகிறது;
நேராய் விழும் நீர் நிலத்தை நனைக்கும்
நீ - மறைந்த போது, கடல் புரத்துச்
சிகரத்தை விட்டு அகன்றேன் நான்.
கீழைக் கடற்கரையில்
உன் வாளைக் கழுவும் போது
எனக்கு நீ எழுதேன்!

**- சந்திரசேகரன் சசீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் முதன்மை பெற்றிருக்கும் பின்லாந்து நாட்டுக் கல்வித் திட்டம்


கல்வி வளர்ச்சியில், உலகில் தலைசிறந்த நாடாக முதல் இடத்தில் உள்ளது பின்லாந்து. அப்படி என்ன சிறப்புள்ளது, பின்லாந்து நாட்டு கல்வி முறையில்... அங்கு, ஏழு வயதில் தான், ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் துவங்குகிறது. எல்லா நேரமும், கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு அசைவிலும், ஒலிகளில் இருந்தும் கற்க ஆரம்பிக்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் கூட குழந்தைக்கு கல்வி தான்.

இவற்றில் இருந்து, வேரோடு பிடுங்கி, வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு வளர்ச்சி அடையும் என, எண்ணுவது, மூடநம்பிக்கை. ஏழு வயதில் பள்ளி செல்லும் பின்லாந்து நாட்டு குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் கூட, ஆண்டின் பாதி நாட்கள் தான், பள்ளி செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை.

பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான் அந்நேரத்திலும் கூட, படிப்புக்கு கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம், இசை, ஓவியம், விளையாட்டு மற்றும் பிற கலைகளுக்கு கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஓய்வறை உண்டு படிக்க பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.

முக்கியமாக, 13 வயது வரை, “ராங்கிங்” என்ற தரம் பிரிக்கும் கலாசாரமோ, மதிப்பெண் அட்டையை தந்து, பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும், வன்முறையோ இல்லை. பெற்றோர், தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்துத் தெரிந்து கொள்ள விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்க வேண்டுமே என்ற மன உளைச்சலும், சக மாணவர்களை போட்டியாளர்களாக கருதும் மனப்பாங்கும் இல்லை. மேலும், இவர்களுக்கு வீட்டுப் பாடம் தரப்படுவதும் இல்லை. மாணவர்களுக்கு எந்த பாடம் பிடிக்கிறதோ, அதில் இருந்து அவர்களே வீட்டுப் பாடம் செய்து வரலாம்.



ஒவ்வொரு பள்ளியிலும், ஒரு மருத்துவர் இருப்பார் அவர், மாணவர்களின் உடல் நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து, ஆலோசனைகள் வழங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பள்ளியில், அதிகபட்ச மாக, 600 மாணவர்கள் இருக்கலாம் அதற்கு, அதிகமான எண்ணிக்கை இருக்கக் கூடாது.

முக்கியமாக, பின்லாந்தில், தனியார் பள்ளிகளே கிடையாது. அங்கு, கல்வி என்பது, முழுக்க முழுக்க அரசின் வசம்.

கோடீஸ்வரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கம் மற்றும் ஏழையாக இருந்தாலும், அனைவரின் குழந்தைகளும், ஒரே பள்ளியில் தான் படிக்க வேண்டும். "எனது பிள்ளை "இன்டர்நேஷனல்" பள்ளியில் படிக்கிறது..." என்று பெருமை கொள்ள முடியாது.

அனைவருக்கும் சமமான கல்வி தரம் என்ற உத்தரவாதம் உள்ளது. அதனால் தான், பின்லாந்து நாட்டில், 99 சதவீதம் குழந்தைகள், ஆரம்ப கல்வியை பெற்று விடுகின்றனர். அதில், 94 சதவீதம் பேர் உயர்கல்விக்கு செல்கின்றனர் "ரியூஷன்" என்ற அருவருப்பான கலாசாரம், அந்நாட்டுக்கு அறிமுகமே இல்லை.

தேர்வுகளை அடிப்படை முறைகளாக கொள்ளாத இந்த கல்வி முறையில் பயின்று வரும் மாணவர்கள் தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில், முதல் இடங்களை பிடிக்கின்றனர். "இது எப்படி சாத்தியப்படுகிறது..." என, கல்வியாளர்கள் திகைக்கையில், அந்த புதிருக்கான விடையை, ஐ.நா., சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்துள்ளது. அது, உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐ.நா., சபை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுகிறது. இதில், பின்லாந்து நாடு, எப்போதும் முன்னணியில் இருக்கிறது.

மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை, ஆர்வத்துடன் சுவைப்பதில், புதிர் எதுவும் இல்லை தானே!

உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், அதன் பிரதிநிதிகளும், பின்லாந்து கல்வி முறையின் சிறப்புகள் குறித்து அறிந்து கொள்வதற்காக, அந்நாட்டை நோக்கி குவிகின்றனர்.

உலகின், 56 நாடுகளில் இருந்து, 15 ஆயிரம் பிரதிநிதிகள் ஒவ்வொரு ஆண்டும் செல்கின்றனர். இதன் மூலம், அந்நாட்டின் அன்னிய செலவாணியில், கணிசமான சதவீதம், கல்விச்சுற்றுலாவின் மூலமே அந்நாட்டுக்குக் கிடைக்கிறது.

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ் மாலைகளை, பின்லாந்து நாட்டின் கல்வியாளர்களும், அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக் கொள்வது இல்லை.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், "பின்லாந்தின் கல்வி முறை தான், உலகிலேயே சிறந்தது என, சொல்ல முடியாது. ஏனெனில், இந்த ஆய்வில், எல்லா உலக நாடுகளும் பங்கேற்காத நிலையில், இப்படி ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களை விட, சிறந்த கல்விமுறையும் இருக்க வாய்ப்பு உள்ளது..." என்கின்றனர்.

பின்லாந்து நாட்டில் ஆசிரியர் பணி என்பது, மிகுந்த சமூக கௌரவம் உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில், ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவது தான், லட்சியம்!

அதேநேரம், அங்கு ஆசிரியர் ஆவது, அத்தனை சுலபம் அல்ல. மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து, ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிட பள்ளிகளில் சேர்ந்து, கடும் பயிற்சி எடுக்க வேண்டும் பின், ஆறு மாதம் ராணுவப் பயிற்சி ஒரு ஆண்டுக்கும் மேலாக, பள்ளிகளில், நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி.

ஏதாவது ஒரு பாடத்தில் திட்ட வரைவுக்காக குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்ட திட்டங்கள் குறித்த தெளிவுக்காக, தேசிய அமைப்புகளில் இருந்து சான்றிதழ், தீயணைப்பு, தற்காப்பு பயிற்சி மற்றும் முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று என, ஆசிரியர் பயிற்சிக்கு, ஏழு ஆண்டுகளைச் செலவிட வேண்டும்.

இப்படி, ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில், பின்லாந்து நாட்டு அரசு மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள் தான், அங்கு, கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கியுள்ளது! ●

**- நந்தவனம்**

# வெற்றித் தருணத்தில் முத்தையா முரளீதரனுக்குக் கிடைத்த கீர்த்தியும் அதி உச்ச கௌரவமும்



இலங்கை கிரிக்கட் அணி, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஓவல் மைதானத்தில் (England) இந்திய அணியை வெற்றி ஈட்டிய வேளையில், டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் பந்து வீச்சில் உலக சாதனை புரிந்துள்ள சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் ICC யின் HALL OF FAME விருது பெற்ற முதல் இலங்கை வீரர் என்ற பெருமையினை ஓவல் மைதானத்தில் பெற்றுக் கொண்டார். சர்வதேச ரீதியில் 4 பேருக்கு இம் முறை இவ்விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சம்பியன் கிண்ணத் தொடரில் இந்தியா 50 ஓவர்களில் 321 ஓட்டங்களைப் பெற்றது; இலங்கை 48.4 ஓவர்களில் 3 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி பெற்ற அதிக பட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். கிரிக்கட் ரசிகர்களுக்கு மேலும் ஒரு மகிழ்ச்சியை முரளீதரன் அளித்துள்ளார். நாமும் அவரை மனதார வாழ்த்துவோம்.

**- கதிரவேலு, மகாதேவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேமா ஹதீபன்

# காட்டுச் சேவலின் மகிழ்ச்சி

ஒரு பெரிய காட்டில் எல்லா மிருகங்கள் பறவைகளுடனும் ஒரு காட்டுச் சேவலும் வாழ்ந்து வந்தது. ஒவ்வொருநாளும் அதிகாலை சேவல் எழுந்து கொக்கரக்கோ கொக்கரக்கோ என்று கூவி மற்றைய மிருகங்களையும், பறவை களையும் நித்திரையில் இருந்து எழுப்புவது வழமையாக இருந்தது.

சேவல் அதிகாலையில் கூவுவது சில மிருகங்களுக்குப் பிடிக்கவில்லை. தங்களின் நித்திரையை கலைக்கின்றது. எப்படியாது சேவல் கூவுவதை நிறுத்தவேண்டும் என்று தீர்மானித்தன.

மிருகங்கள் ஒன்று கூடி காட்டுச் சேவலின் வீட்டுக்குச் சென்றன. தங்களின் நித்திரை கலைகின்றது. இனிமேல் அதிகாலை கூவுவதை நிறுத்த வேண்டும் என்று கூறியன. என்னால் காலையில் கூவாமல் இருக்க முடி யாது முயற்சி செய்கின்றேன் என்றது சேவல். ஆனால் அடுத்தநாள் காலையிலும் சேவல் கூவியது.



மிருகங்களும் பறவைகளும் மீண்டும் ஒன்று கூடின. காட்டுச் சேவல் பசியினால் தான் அதிகாலையில் கூவுகின்றது. அதனால் நாங்கள் எல்லோரும் உணவு சேர்த்து கொண்டு வந்து சேவலுக்கு சாப்பிடுவதற்கு கொடுத்துப் பார்ப் போம் என்று முயல் யோசனை சொல்லியது. அதற்கு மற்ற மிருகங்களும் பறவைகளும் சம்மதித்தன.

எல்லோரும் காட்டுச் சேவலுக்குத் தேவை யான தானியங்கள், பருப்பு வகைகள், நெல் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு காட்டுச் சேவலின் வீட்டுக்குச் சென்றன. பசியினால் தான் அதிகாலையில் எழுந்து கூவுகி றாய், இவற்றை எல்லாம் நன்றாக சாப்பிட்டு விட்டு தூங்கினால் கூவமாட்டாய் என்று கூறி சாப்பாட்டினைக் கொடுத்து விட்டுச் சென்றன. எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு நன்றாக நித்திரை கொண்டது சேவல் ஆனாலும் மறு படியும் அதிகாலை எழுந்து கூவியது.

மிருகங்களும் பறவைகளும் மீண்டும் ஒன்று கூடி யோசைன செய்தன. இப்போது குரங்கு ஒரு யோசனை சொன்னது. அதிகாலை வெளிச்சத்தினைக் கண்டு தான் சேவல் கூவுகின் றது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து காட்டுச் சேவ லின் வீட்டை இருட்டாய் இருக்கும்படி செய்தால் சேவல் கூவாது என்று கூறியது.

குரங்கின் யோசனை நல்லதாக இருக் கின்றது என்று எண்ணி எல்லா மிருகங்களும் பறவைகளும் காட்டுச் சேவல் வீட்டை காட்டில் உள்ள இலை, குழைகளைக் கொண்டு இருட் டான வீடாக மாற்றின. ஆனால் மறுபடியும் அதிகாலை காட்டுச் சேவல் கூவியது. என்ன செய்தாலும் சேவல் கூவுகின்றது சேவல் கூவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதை நிறுத்த முடியாதுபோல மிருகங்களும் பறவைகளும் கதைத்துக்கொண்டன.

மறுநாள் ஒரே மழை. இரை தேடச் சென்ற மிருகங்களும் பறவைகளும் மழையில் நனைந்தன. காட்டுச் சேவலும் மழையில் நனைந்தது. காகம் முதலில் நித்திரையினால் எழும்பிப் பார்த்தது. நல்ல நித்திரை கொள்ளுகின்றன. அட இன்று காட்டுச் சேவல் ஏன் கூவவில்லை. அது தான் சந்தோசமாகமற்ற மிருகங்கள் நித்திரை கொள்கின்றன என்று எண்ணியது. ஆனால் நன்றாக விடிந்து விட்டது. அவைகள் வேலைக்கு போக வேண்டுமே நன்றாக தூக்குகின்றனவே.

காகம் அவைகளை எழுப்பியது. அவை தாமதமாக வேலைக்குச் சென்றன.

மாலை எல்லா மிருகங்களும் ஒன்று கூடின. இன்று சேவல் கூவாதபடியால் தான் நாம் நித்திரையால் தாமதமாக எழும்பினோம். இதனால் வேலைக்குத் தாமதமாகச் சென்றோம். காட்டுச் சேவலிடம் மன்னிப்புப் கேட்க வேண்டும். நாம் தொந்தரவு செய்தபடியால் தான் சேவல் கூவவில்லை வாருங்கள் சேவலைப் பார்த்து மன்னிப்புப் கேட்போம் என்று சேவல் வீட்டுக்குச் சென்றன. அங்கே சேவல் காய்ச்சலினால் நடுங்கியபடி படுத்துக்கிடந்தது. எங்களை மன்னித்து விடும்படி எல்லா மிருகங்களும் சேவலிடம் மன்னிப்புக் கேட்டன.

காட்டுச் சேவல் சொன்னது எனக்கு இன்று காய்ச்சல் அதனால் தான் என்னால் கூவமுடியவில்லை. இனிமேல் நான் அதிகாலையில் சந்தோசமாக கூவுவோன் என்றது.

## அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்

"உலக வர்க்கத்தின் உச்சநிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை. அற்ப மகிழ்ச்சி மரணம் என்னை அண்மித்த போது நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன்.

பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தை மட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவை களைக் கைநெகிழ்ந்து விட்டேன் என்பதை உணருகின்றேன்.

உறவுகளையும் வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்க வேண்டும்." மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்

பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன் நிறைவுக்கும் மனித மாண்புக்கும் பெரும் தடையாக அமையும். சொத்துக்களின் தொடர் தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். எம் வாழ்வின் இறுதியில் எம்முடன் கூடவருவது எம் அன்புச் செயல்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

**"காதற்ற ஊசியும் வாரது கடை வழிக்கே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதைத் தொட்டதும் சுட்டதும்

இன்றைய தலைமுறையினரின் கல்வி சார்ந்த எண்ணப்பாடு எப்படியுள்ளது. என்பதனை ஆராய்ந்து பார்க்கையில் யாரைக் குற்றம் சொல்வது என்றே புரியவில்லை.

கல்வி நிலையங்களைப் பெற்றோர் பணத்தைக் கொடுத்து பொருட்களை வாங்கும் வியாபாரக் கூடமாக மாற்றி விட்டனர். இதனால் கல்வியை டெலிவரி செய்யும் ஏஜன்டுகளாக ஆசிரியர்களைக் கருகின்றனர் என்றால் மறுப்பதற்கில்லை. பெற்றோரின் நோக்கத்திற்குக் காரணம் சமூக அமைப்பில் ஏற்பட்ட போட்டாபோட்டியே.

எதற்குப் போட்டி அப்படிக் கேட்பதை விட எதற்கெல்லாம் போட்டியில்லையென்று கேட்பதே பொருத்தமாக இருக்கும். மாணவர்களின் சிந்தனையைக் கிளறிவிடுவதே கல்வி. இத்தகைய தன்மையை இன்று நம்நாட்டில் எதிர்பார்க்க முடியாது.

நல்ல தொழில் வாய்ப்புக்கும், கைநிறைய சம்பாதிப்பதற்கும் எந்தக் கல்விக்கூடம் சிறந்த பயிற்சி கொடுக்குமோ அதுவே சிறந்த கல்விக் கூடமாக நோக்கப்படுகிறது. இதனைக் கல்விக்கூடம் என்பதனை விடப் பயிற்சிக் கூடம் என்றுதான் சொல்ல முடியும். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தொழிலை மையப்படுத்தியே பயிற்சி பெறுகின்றனர்.

எதையுமே சிந்திக்காது யாரோ எழுதிவைத்த பாடத்தின்படி மனப்பாடம் செய்து, புள்ளி பெற்று தொழில் தேடி இருக்கையில் அமர்ந்து விடுவது என்பதோடு குறிக்கோள் முடிவடைகிறது. பயிற்சிக்கூடங்களின் கடமைப்பாடும் நிறைவடைகின்றது.

இதனால் நல்ல பயிற்சியாளர்கள் உருவாகலாம் ஆனால் சிந்தனா சக்தியுடைய சந்ததியினர் உருவாக முடியாது. இன்றைய மாணவர் சமுதாயம் சமூகம் சார்ந்த கல்வியைக் கற்பதற்கு வாய்ப்பேயில்லை. ஒரு மாணவனின் பாடத்திட்டம் கேள்வியை அவனுக்குள் உருவாக்கி, சிந்தித்து விடை தேட வாய்ப்பளிக்க வேண்டும். அவ்வாறான தன்மை கல்விக் கூடங்களில் உருவாகுமானால் விடைகள் அனைத்தும் சமூகத்திலிருந்தே கிடைக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருததுமில்லை. இதன் காரணமாகத்தான் வாழும் சமூகம் மட்டுமன்றி உலகம் முழுவதும் ஊடுருவி வருகின்ற பரந்த விரிவுபட்ட அறிவு அவனுக்குக் கிடைக்கும்.

இவ்வாறான மாணவ சமுதாயம் தனது சமூகம் சார்ந்த பாரம்பரிய கலைகலாசார விழுமியக் கோட்பாடுகளை உற்று நோக்கத் தலைப்படுகின்ற போது சமூக ஏற்றத்தாழ்வுகள், சமூகச் சீர்கேடுகள், சமூகக் குறைபாடுகள், தொழில் புதிய யுக்திகள், புதிய தொழில் கல்வி முறைமைகள் இப்படி எத்தனையோ விடயங்கள் அறிய வாய்ப்பு ஏற்படும். இவ்வாறானமாற்றுச் சிந்தனை வழங்குவதற்கு எண்ணற்ற ஆசிரியர்கள் தயாராக இருந்த போதும் மேற்கத்திய வாழ்வியல் முறையில் மயக்கமடைந்திருக்கும் பல பெற்றேர்களும் மாணவர்களும் தயாராகவேயில்லை என்பதே வருத்தத்துக்குரிய விடயம்.

பின்லாந்து, சுவிற்சர்லாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்விக் கூடங்கள் பாடப்பரப்பைப் புறம் தள்ளுகின்றன. மூன்று வயது முதல் தனிப்பட்ட திறன்கள் கிளறப்படுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலை விளையாட்டுப் பள்ளி முதல் கொண்டு கல்லூரிகள் வரை உருவாக்கி விடுகின்றன. இதற்கான எந்த பிரத்தியேக ஏற்பாடுமில்லை.

நம் பாட்டன், பூட்டன், வாழ்ந்த, படித்த கல்விக்கூடங்கள் நான்கு சுவர்களுக்குள் அடங்கவில்லை. பரந்த வெளியில் இயற்கையோடு இயைந்த கல்வியைக் கற்ற அறிஞர்கள் அவர்கள். அதை நாம் மறந்துவிட்டோம். ஐரோப்பிய நாட்டவர்கள் மறக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. இதனால் தனது பெற்றோர் தம்மீது அடையாளப்படுத்தும் தொழிலை மையப்படுத்திக் குழந்தைகள் கற்க முயல்வதில்லை.

ஐரோப்பாவில் வாழும் சந்ததியினர் தாம் வாழும் நாட்டின் அனைத்துத் தொழில்களிலும் கல்லூரி வரையில் பயிற்சி பெறுகின்றனர். பல்கலைக்கழகம் செல்கையில் மட்டுமே தனது இறுதித் தொழிலை முடிவு செய்கின்றனர். ஆனாலும் தனக்கான மாத வருமானத்தை மையப்படுத்தியல்ல தனக்கான தனித்திறமையை அளவுபடுத்தியே.

எமது மாறுபட்ட மனோநிலை, தேவைகள், ஆசைகள், போட்டிகள் எமது குழந்தைகளை பலிக்கடாக்களாக மாற்றி விட்டன. இதனால் ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு இயந்திர மனிதனாக இனிவரும் சமுதாயம் இருக்குமென்பதில் மாற்றுக்கருதில்லை.

**- வாணமதி**
(சுவிற்சலாந்து)

## மறைந்தாரே !

எல்லோருமுள்ளார் ஏடுகளில்,
எம் 'பா வாணர்' வருவதில்லை ?
நல்லது மல்ல — தமிழர்கள்
நன்றி மறந்தவருமல்லர்!

ஒரேயொருவர் தான் தமிழ் வளர்த்தார்.
உண்மையில் எனது பார்வை இதே!
வராத 'வாண' ரும் வர வேண்டும்.
வண்டமிழ்க்கான வேண்டுதலாம்!

'தேவ நேய'ரின் நூல்களினைத்
தேடியெடுத்துப் படித்தறிந்தால்
ஆவால் பெருகும் ஐயமிலை,
அத்தனையும் தனித் தமிழடடா!

முதற்றாய் மொழி 'குறள் மரபுரை'யை,
முற்றும் படித்தாலே போதும்!
எதற்காய் வந்தாரோ அதனை,
இன்னலுள் ஆற்றி மறைந்தாரே!

**'தாமரைத் தீவான்'**
திருகோணமலை

**அட்டையில்....**
**பவளவிழா நாயகர் உயர்திரு.எஸ்.முத்தையா அவர்களும், அவர்தம் துணைவியாரும், சாதனை வீரர் திருமிகு.முத்தையா முரளீதரனும் பெருமைபெற்று நிற்கின்றார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரன்

இளங்கீரன் என்று அழைக்கப்படும் முற்போக்கு எழுத்தாளர் வாழ்ந்த கால ஓட்டத்தில், ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் பல வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்திய ஒரு முக்கிய யுக புருஷராக அவரை அடையாளம் கண்டுள்ளோம்.

1. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதில் அவரின் பங்களிப்பு
2. மரபுப் போராட்ட காலத்தில், அதனை வலுவாக முன்னெடுப்பதில் முன்னின்று உழைத்தவர்.
3. தேசிய இலக்கியக் கோட்பாட்டை முன்னிறுத்தி அதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தமை.

ஆகிய மூன்று விடயங்களையும் முன்னிறுத்தி எனது உளக்கிடக்கைகளை எனது கட்டுரை வாயிலாக முன்வைக்கின்றேன்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் முற்போக்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்திற்கு உந்து சக்தியாக இருந்துள்ளமை வரலாற்று உண்மை. தனது இலட்சியங்களையும் நோக்கங்களையும் வேலைத்திட்டங்களையும் இலக்கிய உலகிற்கும் நாட்டுக்கும் 1954 ஒக்டோபர் 25ஆம் திகதி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பிரகடனப்படுத்தியது.

மனித வர்க்கம் யுக யுகாந்திரமாகக் கண்ட இலக்கியக் கனவைச் சாதனையாக்க, வர்க்க பேதமற்ற ஒப்பில்லாச் சமுதாயத்தை சிருஷ்டிக்க மனித இனம் நடத்தும் போராட்டத்தையும் அதில் தோன்றும் புதிய சமுதாய அமைப்பையும் பிரதிபலிக்கும் சோஷலிச யதார்த்தவாதம் என்ற இலக்கியத்தத்துவத்தை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது இறுதி இலட்சியமாகக்கொண்டு மக்களின் சகல பகுதியினரையும் பிரதிபலித்து நிரந்தர உலக சமாதானம், தேசிய விமோசனம், உண்மை ஜனநாயகம், உயர்ந்த வாழ்க்கைத்தரம், சிறந்த கலாசாரம், நாட்டின் அரசியல் பொருளாதார சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றுக்காக மக்கள் நடத்தும் போராட்டங்களைக் கருவூலமாகக் கொண்ட இலக்கியங்களைப் படைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்தது.

இந்தப் பாசறையில் முகிழ்ந்தெழுந்த ஆற்றல் மிக்க படைப்பாளியாக இளங்கீரன் முன்நிலைப் படுத்தப்படுகின்றார். அவர் சொல்லும் எழுத்தும் தாம் வாழ்ந்த காலச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பன வாகவே அமைந்தன. சமுதாயத்தில் வாழ்வு மறுக்கப்பட்ட, வாழப்பிறந்த மக்களின் வாழ்வுக்கான, உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கான போராட்டங்களைப் பிரதிபலிக்கும் வாழ்வின் மீதும் அவர்களது போராட்டத்தின் வெற்றியின் மீதும் நம்பிக்கையூட்டும் இலக்கியங்களையும் மக்களின் யதார்த்த வாழ்க்கையையும் பிரச்சினைகளையும் பிரதிபலிப்பதோடு, வாழ்க்கையின் விமோசனத்திற்கான சரியான பாதையைச் சுட்டிக்காட்டும் இலக்கியங்களையும் சரிநிகரான மக்களின் வாழ்க்கையை அன்றாட நிகழ்ச்சிகளைக் கருவூலமாக்கி அவர்களைப் பாத்திரமாகக் கொண்டு அப்பாத்திரங்களின் மூலம் உயர்ந்த இலட்சியங்களை முன்னுக்குக் கொண்டுவரும் இலக்கியங்களை இளங்கீரன் படைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்குள் உயர்வு தாழ்வு காட்டும் சாதியமைப்பு, பெண்ணடிமைத்தனம், வாழ்க்கை உரிமைகளை மறுப்பது, மூட நம்பிக்கை போன்ற சமுதாயத் தீம்புகளை எதிர்த்துப் போராடுதல் என்ற இலட்சியத்துடன் நின்ற முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரன் இன்றும் எங்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

மரபுப் போராட்டம், பண்டிதர்களுக்கும் பழமைவாதிகளுக்கும் - முற்போக்குவாதிகளுக்கும் இடையே 1961-62களில் நிகழ்ந்த இப் போராட்டம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். 1961ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் சாகித்ய விழா நடைபெற்றது. விழாவில் உரையாற்றிய அனைவரும் முற்போக்கு எழுத்தளார்களின் படைப்புக்களை எள்ளி நகையாடினர். அவை இழிசனர் வழக்கு, தமிழ்மரபுக்கு மாறானவை, இத்தகைய படைப்புக்களை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கூறினர்.

விழாவுக்குத் தலைமை வகித்த சு.நடேசபிள்ளை முற்போக்கு எழுத்தாளர்களில் ஒரிருவர் இங்கு வந்து பேசலாம் என்றார். உடனே இளங்கீரன் மேடையில் ஏறினார்.அவரது உரையில், பேசினோர் அத்தனை பேரின் தாக்குதலுக்கும் தக்க பதில் கொடுத்தார்.

"முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் மொழிக்கும் செழுமையான பங்களிப்பு என்பதனையும் காலத்திற்கேற்ப மாறிவருவதுதான் தமிழலக்கிய மரபு என்பதையும் தமிழிலக்கிய வரலாற்றுச் சான்றுடன் நிறுவினார்.பலத்த கரகோசம் சபையிலிருந்து வந்தது. தலைவர் தமது முடிவுரையில் "முற்போக்கு எழுத்தாளர்களின் கருத்துக்கள் முழுவதையும் முற்றாகப் புறக்கணிக்க முடியாது. அவற்றில் கொள்ளத்தக்கவையும் உள்ளன." என்றுகூறிய வார்த்தைகள் இளங்கீரனின் ஆணித்தரமான விளக்கத்திற்கும் முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கும் கிடைத்த அங்கீகாரம் என்பது உறுதியாயிற்று.

இளங்கீரன் ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் எழுச்சிக்கு பெரும்பங்கு ஆற்றியவர். சமகால ஈழத்து இலக்கிய வரலாற்றைப் பற்றி எழுதும் எவரும் அவரைப் புறக்கணித்து எழுத இயலாத அளவுக்கு அவரினது பங்களிப்பின் முக்கியம் பரவலாக உணரப்பட்டுள்ளது. அவர் படைப்பிலக்கியத்தில் மும்முரமாகச் செயற்பட்ட காலம் 1950 முதல் 1970கள் வரையில் எனலாம். இக்காலகட்டத்தில் அவருடைய எழுத்தும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் ஈழத்தின் சமூக உணர்வின் வளர்ச்சியையொட்டிய விருத்தியைக் காட்டுகின்றன.

இளங்கீரன் ஒரு சிறுகதைப் படைப்பாளியாக, நாடகத்துறையில் தடம்பதித்தவராக, கட்டுரையாளராக, பத்திரிகை சஞ்சிகை ஆசிரியராக, திறனாய்வாளராக என்றெல்லாம் அறியப்பட்டாலும் அவர் நாவலாசிரியராக முன்நின்றார். அவர் இருபதுக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார். பல நூலுருப்பெற்றுள்ளன. சமூக உணர்வின் வளர்ச்சியையும் சமூகமாற்றத்திற்கான விளைவையும் அடையாளம் காட்டுகின்ற பதிப்புக்களே அதிகம். அவரது படைப்பாற்றலின் வளர்ச்சி அவரது சமூக உணர்வின் வளர்ச்சியை ஒட்டியே நிகழ்ந்துள்ளமையே இதற்கான காரணமாகும். அவ்வளவு தூரத்திற்கு அவர் சமுதாயத்தை நேசித்தார்.

1950க்குமுன் இந்தியாவைத் தாய்நாடாகவும் இலங்கையைச் சேய்நாடாகவும் ஈழத்தமிழர் கருதி வந்தனர்.இந்த உணர்வில் இந்திய நூல்களையும் சஞ்சிகைகளையுமே விரும்பிப் படித்தனர். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஈழத் தமிழரின் வாழ்க்கை, அவர்களின் உணர்வுகளை, அபிலாசைகளை, சிந்தனைகளைச் சித்தரிப்பதாக இருக்கவில்லை. இந்த இடைவெளி இலங்கை எழுத்தாளர்கள் மத்தியில் வலுப்பெற்று ஈழத்தின் இலக்கியத்திற்குப் புதிய படைப்பிலக்கியப் பாதை வேண்டும் என்ற தேவை காரணமாக புதிய பாதை நோக்கிச் செல்ல முற்பட்டனர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கிய இயக்கத்தினூடாக ஈழத்து எழுத்தாளர் மத்தியிலும் ஈழத்துப் படைப்பிலக்கியம் சம்பந்தமாகவும் விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் எற்பட்டது.

எனவே ஈழத்தின் படைப்பிலக்கியம் தமிழ் என்னும் பொதுப் பரப்புக்குள் அடங்கும் அதேவேளையில் அதன் தனித்துவத்தைக் காட்டவும் தனித்துவத்தை நமது மக்கள் இனங்கண்டு அதன் மீது தமது இலக்கிய உணர்வைப் பதிய வைக்கவும், நேசிக்கவும், யதார்த்தவாதக் கோட்பாடை எளிதில் புரிந்துகொள்ளவும் அதற்குத் தேசியம் என்னும் சொற்பிரயோகம் தேவையாக இருந்தது. எனவே, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது முதலாவது மாநாட்டில் முன்வைத்த ஜனநாயக யதார்த்தவாதக் கோட்பாட்டை அடியொட்டி 1960இல் தேசிய இலக்கியத்தைப் பிரகடனஞ் செய்தது. இதனைத் தொடர்ந்து தேசிய இலக்கியம் பற்றிய விளக்கத்தை அளிக்க வேண்டியிருந்தது. 1961 இல் வெளியான இளங்கீரனின் கலை இலக்கியச் சஞ்சிகையான 'மரகதம்' இப் பணியை ஏற்றது. அதன் முதல் இதழில் பேராசிரியர் க.கைலாசபதி 'தேசிய இலக்கியம்' பற்றிய தனது முதலாவது கட்டுரையை எழுதினார். அதனை அடுத்து ஏ.ஜெ.கனகரத்தினா, அ.ந.கந்தசாமி ஆகியோர் எழுதியவை மரகதத்தில் வெளிவந்தன.

'தேசிய இலக்கியம்' முன்வைக்கப்பட்டதையும், ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்கள் வாசகர்களால் வரவேற்கப்பட்டதையும் தொடர்ந்து இலக்கிய உலகில் அது அரசோச்சிக் கொண்டிருந்தது. செல்வாக்கை இழந்திருந்த இலக்கியச் சனாதனிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள். கண்டனக் கணைகளை வீசினர். போதிய கல்வியறிவும் படிப்பும் இல்லாதவர்கள், தமிழ் மரபுதெரியாதவர்கள். மரபை மீறி எழுதும் இவர்கள் மட்டமான எழுத்தாளர்கள். இவர்களின் இலக்கியம் 'இழிசனர் இலக்கியம்' என்றெல்லாம் வசை பாடினர். இதனையொட்டிய மரபுப்போராட்டம் தொடங்கியது.

1962 ஜனவரியில் தினகரன் பத்திரிகையில் 'தற்காலத் தமிழ் இலக்கியம் தமிழ் மரபுக்குப் புறம்பானதா? என்னும் விவாதக் கட்டுரைகள் வெளியாயின. மரபுவாதிகள் தரப்பில் கலாநிதி ஆ.சதாசிவம், பண்தடிர் இளமுருகனார், பண்டிதர் வ.நடராஜா போன்றோரும் முற்போக்கு எழுத்தாளர் தரப்பில் கலாநிதி கா.சிவத்தம்பி, அ.ந.கந்தசாமி, இளங்கீரன் போன்றோரும் கட்டுரைகளை எழுதினர். இறுதியில் படைப்பிலக்கியவாதிகள் சார்பில் விவாதம் முடிவுற்றது.

1962இல் நடந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் போது 'புதுமை இலக்கியம்' மலருக்குப் போராசியர் க.கைலாசபதி 'சிறுகதை' என்னும் கட்டுரையை எழுதியிருந்தார். அவர் தினகரன் ஆசிரியராக இருந்தபோது இலக்கிய ரீதியாகப் புதிய விடயங்களை வெளியிடுவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார். அவற்றில் ஒன்று 'நான் விரும்பும் நவாலாசிரியர்' என்னும் தலைப்பில் இலக்கியப் படைப்பாளிகளை எழுதத் தூண்டியதாகும். தகழி சிவசங்கரப்பிள்ளை பற்றி இளங்கீரன் எழுதினார். தினகரன் தமிழ் விழா மலருக்கு 'தமிழுணர்ச்சி' என்னும் கட்டுரையையும், 'கொச்சை' என்னும் கட்டுரையை மரகதத்திலும் எழுதியிருந்தார். தனது கட்டுரைகளைப் பற்றி இளங்கீரன் "எனது கட்டுரைகள் அனைத்தும் ஈழத்துத் தமிழ் இலக்கிய அரங்கில் சர்ச்சைக்குள்ளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களையும், படைப்பிலக்கியங்களைப் பற்றிய புதிய சிந்தனைகளையும் அணுகுமுறைகளையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளதால் இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு இவை ஒரு வகையில் ஆதர்சனமாகவும் அமையலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவரது முதலாவது நாவலாகிய 'நீதியே நீ கேள்' சாகித்திய மண்டலப் பரிசுக்கு சிபாரிசு செய்யப் பெற்றது. 'அவளுக்கு ஒரு வேலை வேண்டும்' என்னும் நாவல் வீரகேசரியில் தொடராகப் பிரசுரமாகியது. இந் நாவல் இளங்கீரனின் அரசியல் சமூக உணர்வினதும் சமூகச்செயற்பாட்டினதும் உச்ச நிலையை அடையாளங்காட்டும் ஒரு காலத்திற்குரியது. கொழும்பு நகர வாழ்வில் உழைத்துண்ணும் தேவையிலுள்ள கீழ் நடுத்தர வகுப்புப் பெண்கள் தொடர்பான இக்கதையில் வரும் நிகழ்வுகள் பல ஏறத்தாள மூன்று தசாப்தங்கள் பிந்திய இன்றைய நவகொலனியச் சூழலிலும் இன்னும் யதார்த்த பூர்வமான சித்தரிப்புக்களாகவே உள்ளன. இந்நாவல் பெண்கள் குறித்த முற்போக்கான ஒரு பார்வையை உடையது என்ற வகையில் வர்க்க உணர்வுகுன்றாத நோக்குடன் எழுதப்பட்டது. ஈழத்துநாவல் இலக்கிய வரலாற்றில் முதன்மை நிலையில் வைத்துக் கணிக்கப்படுபவர்களுள் ஒருவராக இளங்கீரன் இருக்கின்றார்.

'தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்.' 'ஈழத்துமுற்போக்கு இலக்கியமும் இயக்கமும்', 'பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும்' ஆகிய நூல்களையும் இளங்கீரன் எழுதியுள்ளார். பேராசிரியர் க.கைலாசபதி மார்க்சிய வழிநின்று ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட இமயமாக இன்றும் மதிக்கப்படுகின்றார். அவர் வழியில் புடம் போட்ட நவீன இலக்கிய சிருஷ்டி கர்த்தாவாகிய இளங்கீரனின் இனிய நினைவுகள் என்று எம்மைவிட்டு அகலாது.

- தம்பு சிவா

## சமயம் மனிதனுக்கு வழிகாட்டுகிறது

சமயம் என்பது அரசியல் அல்ல. மனிதன் தனக்குள் எடுத்துக்கொண்டு தன் வாழ்வோடு இணைத்துக்கொள்ளும் விருப்பம்தான் சமயம்.

"எனது சமயம் மட்டும்தான் ஏனைய சமயங்கள் தேவையில்லை" என்று நினைப்பது பிழை. இது இலங்கை நாட்டிலும் தற்பொழுது தோன்றியிருப்பது மிகவும் மனவருத்தத்தைக் கொடுப்பதாக உள்ளது. அடிப்படைவாதிகளைப்போல் நாம் சமயத்திற்காகப் போரிட வேண்டியதில்லை. மாறாக அச்சமயத்தின் உண்மைத் தன்மையினைப் பின்பற்றி அதற்கான மரியாதையைக் கொடுக்கும் போது அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது சமயம் மனிதனுக்கு வழிகாட்டுகிறது. இதனால்த்தான் "உங்களின் ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் காட்டுங்கள்" என்று இயேசு கூறினார்.

"நாம் வாழும் மண்ணிலும் உலகெங்கிலும் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மை வளர்ந்தோங்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக!

**- மல்கம் றஞ்சித் ஆண்டகை**
**கொழும்புப் பேராயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. பாலசிங்கத்தின் 'கோடாரிக் காம்பு' ஒரு தனித்துவமான கதை மீண்டும் தமிழகத்துடன் ஒப்பிட்டு பார்க்க வாய்ப்பளிக்கும் கதை. தாழ்த்தப்பட்ட சாதிகளுக்குள்ளும் கூட உள்ள உட்சாதி ஒடுக்குமுறையைச் சொல்லுகிறது இது. பஞ்சம சாதிகளுக்குள் உள்ள இந்த படிநிலை வேறுபாடும் உள் தீண்டாமையும் சிறுபான்மை தமிழர் மாக சபையுள்ளும் கூட வெளிப்பட்டதாக அறிகிறோம். யாழ்ப்பாணப் பஞ்சம சாதிகளைப் போலவே அப்பால் ஆக மோசமான இழி தொழிலுக்கு ஆட்படுத்தப்படும் கொழும்பிலுள்ள அருந்ததியர்கள் இத்தொகுப்பிலும் விடுபட்டுள்ளனர்.

**அ. மார்க்ஸ்**
சென்னை

# கோடரிக்காம்பு

ஆண்டு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. காத்தலிங்கத்தின் சிந்தனை அதிலேயே சுழன்று கொண்டு நின்றது. விழாவிற்கான முழுப் பொறுப்பும் அவன் தலையிலேயே கட்டப்பட்டிருந்தது.

அன்றைய தினசரி அவன் விரல் இடுக்குகளில் கொழுவிக்கொண்டிருந்து. அதை வாசிப்பதற்கு மனம் எழவில்லை.

சனம் இடம் பெயர்ந்து ஓடுவதற்கு, முன்பென்றால் பார்த்த இடமெல்லாம் வாசிகசாலைக்குள் பெடியன்கள் இருப்பார்கள். இப்படியான விழா ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும் பொழுது வகை வகையான ஆலோசனைகளை மொலு மொலுவெனச் சொல்லி செய்வான்கள். காத்தாலிங்கத்திற்குப் பார்க்க வேண்டிய காரியங்கள் ஒறுப்பாக இருக்கும். ஆனால் இப்போ தலையாட்டக் கூட ஆளில்லை!

அத்தகு குறிச்சி வாசிகளின் ஒட்டு மொத்தமான இணைப்பில் எழுந்ததுதான் அந்த வாசிகசாலை.

அதன் கூரைக்கான அஸ்பெஸ்ரஸ் தகடுகள் பொன்னுத்துரையின் உபயம்.

மரத்திற்காகக் காணிக்குள் நின்ற பனைகளைத் தறித்துத் தந்தது முத்துவேலர்.

நிலை கதவு குஞ்சனின் செலவில் ....!

காட்டு கல்லு பறிப்பித்தது சொக்கலிங்கத்தார்....

சீமெந்து செல்லமுத்தர்.

கட்டுவத்தற்கு மேஸ்திரியாக நின்றவர் மதியாபரணத்தார்... எடுபிடி முட்டாள்களாக அந்தக் குறிச்சி மாலைக்கண்....

'இவர்களெல்லாம் இப்போ எங்கே? காத்தலிங்கம் நனவிடை நனைகிறான்.

இவர்களில் பொசுப்பிருந்தவர்கள் வெளிநாட்டில் அகதிகள்...

இன்னும் சிலர் மயிலின் இறகுகளுக்காக கொழும்புக் குச்சுக் குடில்களில் அடைகாக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- CIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணிகளும் குடிவரவு ஆலோசகர்களும்

# Rasiah & Co
## Solicitors


- *Conveyancing*
- *Residential & Commercial*
- *Matrimonial*
- *Immigration*
- *Landlord & Tenants*

**Tel : 020 8543 4040**
**Fax : 020 8543 2400**

180A Merton High Street,
South Wimbledon,
London SW 19 1AY

DX: 300004 Wimbledon South

rasiahsolicitors@btconnect.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


23 வருட கால அனுபவம்

# Linga & Co

## Legal Advisors & Immigration Specialists

## We Specialise in:

- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications
- Family Law
- Employment Law
- Criminal Law



**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285
Fax : 020 8542 9530

46, High Street
Collierswood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சிலர் விமானக் குண்டிற்கும், ஷெல்லுக்கும் உயிரைத்தாரை வார்த்து சொந்த மண்ணுக்குள் மறைந்து கொண்டனர்.

காத்தலிங்கத்திற்குத் தலையை விராண்டி மயிரைப் பிடுங்கி எறிய வேண்டும் போலிருக்கிறது.

"கையில் பேப்பர் விரிச்சபடி இருக்கு. என்ன காத்தி செய்யிற? வாங்கில் குந்தியபடி பூலன் கேட்கிறான்.

"குருவி கலைக்கிறன்"

பூலன் எழுப்பிய சந்தடியால் சுத்திச் சுத்தி பறந்து கொண்டிருந்த குருவி பலமாகக் கீச்சிட்டபடி வெளியே பறந்தது. வாசிகசாலைக்குள் அது கூடுகட்டி இருக்கிறது.

"விழா ஒழுங்குகள் எப்படி இருக்கு?"

"எல்லாருமாகச் சேர்ந்து என்ர தலையில் கட்டிப்போட்டு, கூத்தா காட்டிறியள்." மேசையில் பத்திரிகையை எறிந்தபடி காத்தலிங்கம் பூலனை ஏறிட்டான்.

"உன்னை விட்டா எங்களுக்கு ஆர் இருக்கினம். செய்யக் கூடியதுகள் வெளிக்கிட்டிட்டுதுகள். உந்தக் கோதாரிச் சண்டை தானே இப்படி ஆக்கினது..." பூலன் காத்தலிங்கத்தின் முறுகலைத் தளர்த்தும் முனைப்போடு ஆறுதல் கதை சொன்னான்.

'ஓமடா.... தலைப்பாக் கட்டிரதிலை எங்கட சனத்தைக் கேட்டுத்தான்...' திறந்திருந்த கதவினூடாக காத்தலிங்கத்தின் பார்வை வெளியே விரிந்தது. ஆத்திரக் கொதிப்புக் கொஞ்சம் தணிந்தது.

"பேச்சாளருக்கு ஆரைப் புடிப்பம்...."

"சனம் நல்லா உத்தரிச்சுப் போட்டுது. ஆண்டு விழா நிகழ்ச்சிகள் கொஞ்ச நேரமாவது அதுகளைச் செந்தளிப்பாக்க வேணும்.... சோக்கான ரசனி படமொன்றை காட்ட வேணும்.."

" எட கோதாரியில போவானே... நான் கேட்டது பேச்சாளரை" புடையன் பாம்பாகக் காத்தலிங்கம் சீறினான். பூலன் வெலவெலத்தான்.

"சின்னக்கண்டன் இருக்கிறாந்தானே..." அடக்கமாகப் பூலன் சொன்னான்.

"இன்னும் ரெண்டொருத்தரைக் கொண்டு வரவேணும். ஆமானவையெல்லாம் அள்ளுப் பட்டுக் கொழும்புக்குப் போயிட்டினம்... ம் ..... பூலன் இன்னும் பனை கிடைக்கே?..."

ஆண்டு விழாவென்றால் அள்ளித்தரும் சீவல் தொழிலாளிகளின் பங்களிப்பு தற்பொழுது சிறுத்து வருவதை பூலனின் சொற்கள் காத்தலிங்கத்தின் மனதில் ஊற்றெடுக்க வைத்தன.

"அயத்துப் போனன் காத்தி. அம்பிகாவின்ர தாய் மோசம் போயிட்டா... கடையிக்க கேள்விப்பட்டன்..."

"மெய்தானா? அப்ப சின்னக்கண்டன் நிப்பான். வாயன் போய்ப் பார்ப்பம்..."

"வாறன்..."

இருவரும் எழுத்து நடந்தனர். வெளியே சுற்றி வட்டமடித்துக் கொண்டிருந்த குருவி மீண்டும் வாசிகசாலைக்குள் நுழைத்து கொண்டது. இனி அதன் இரச்சியந்தான்!

* * *

மேடையில் சின்னக்கண்டன் எழுந்து பேச வந்தால் காத்தும் சற்று நின்று கேட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி அம்பிக்காவின் சொற்பொழிவோ தங்கப் பதுமையில் நடிகை பத்மினியின் ஆவேசப் பேச்சுக்குப் பின் நிற்காது. கேட்போரை அலுக்கச் செய்யும் வகையில் விஷயத்தை 'அறு அறு' வென்று அறுத்துக் கொட்டாமல் அவர்களைப் பதுமைகளாக்கும் சொற் சாதுரியம் இருவருக்குமே அருளப்பட்ட கொடை! இந்த மேன்மையால் பிறப்பால் இவர்களுகேற்பட்டிருக்கும் துடக்கு சிலரது கண்ணில் படாது. இவர்கள் சமூகம் சார்ந்த மேடைகளில் பேசினாலும் இவர்களை அரசியல் மேடைக்களுக்கும் அழைப்பதுண்டு.

"பஞ்சமரின் பிரச்சினைகளுக்காகத்தான் நாங்கள் பேசுகிறோம். அரசியல் எமக்கு வேணாம்..." அரசியல்வாதிகளுக்கு நெற்றியடி கொடுப்பார்கள். வலைக்குள் சிக்க மாட்டார்கள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் சின்னக் கண்டன் தம்பதி மிகவும் உற்சாகமான உறுப்பினார்கள். அதன் பரம்பலுக்காக இவர்களது குரல் ஓங்கி ஒலிக்கும். இந்த நீரோட்டத்தில் தான் இவர்களது தோழமை கருக்கொண்டது.

கல்வியும், உத்தியோகமும் இவர்களைத் தமது சமூகங்களின் மத்தியில் உன்னத மனிதராக்கியது. இருவருமே கச்சேரியில் கிளாக்கர்கள் உத்தியோக வித்து இவர்களது பெற்றோர்களின் மனதில் பென்னம் பெரிய கோட்டையை உயர்த்தியது.

"எங்கட பகுதியுக்க எத்தினை பேர் உத்தியோகம் பாக்கீனம் " அம்பிகாவின் ஆளுமை நிமிர நிமிர தகப்பனுக்கு அச்சுறுத்தல் கூடிக் கொண்டே போனது. அவர் சார்ந்த சமூகத்தில் மகளுக்குத் தோதான மாப்பிள்ளையை அவரால் பொறுக்க முடியவில்லை. சஞ்சலம் அவரைப் பம்பரமாக ஆட்டியது.

சின்னக்கண்டன் பகுதியில் இலட்சணமான பெண்கள் இருந்தனர். உத்தியோகத்தனுக்கு அள்ளிக் கொடுக்கவும் யார் முந்துவதென்ற போட்டி இருந்தது!

"உந்தக் காசை என்னத்துக்கு அவனை வாங்க நிக்கினம். உதுக்களுக்கு முடிச்சுக் குடுக்கிறதெண்டா அவனை என்னோட சீவ வைச்சிருக்கலாம்..." சின்னக்கண்டனின் தகப்பன் உத்தியோக மாயையில் மடங்கிச் சொந்த பந்தங்கள் அனைத்தையும் தூக்கி எறிந்தார்.

தங்களது போக்கிற்குத் திருமணம் தடையாகி விடுமென்ற மனப்பாங்கில் சின்னக் கண்டனும், அம்பிகாவும் கலியாணத்தில் சொட்டு அக்கறை கூடக் காட்டாமல் திரிந்தனர். ஆனால், இவர்களோடொத்த வயதுக்காரர் குடியும் குடித்தனமுமாகித் தமது குழந்தைகளின் பிறந்ததினக் கொண்டாட்டங்களுக்கு இவர்களுக்கு அழைப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். இத்தகைய கொண்டாட்டமொன்றில் குஷியாக இருந்த பொழுது நண்பனொருவன் சின்னக் கண்டனைப் பார்த்து.

"வரிஷம் முன்நூத்தறுபத்தைஞ்சு நாளும் மற்றவைக்கு பிறசென்டுக்களும் வாழ்த்துப் பத்திரமும் குடுத்துக் கொண்டிருந்தால் சரியா, எப்ப நாங்க உமக்கு அறுகரிசி போடுகிறது..." அம்பலத்தில் இப்படியொரு குரல் ஒலித்தது. சின்னக்கண்டனுக்கு கூச்சமாக இருந்தது. பெண்களோடிருந்த அம்பிகாவைப் பார்த்தான். அவள் முகத்தில் சலனத்திரை படர்ந்திருந்தது.

"சங்கமும் கூட்டமுமெண்டு திரியாம தோதான ஒண்டைப் பாருங்க..." முறுவலித்தபடி இன்னொருவர் அம்பிகாவை பார்த்துச் சொன்னார். கொண்டாட்டத்திற்கு வந்தவர்கள் கலைந்தபின் தனக்கு முன் இருந்த அம்பிகாவிடம் சின்னக்கண்டன் சொன்னான்.

கூட்டாளிமார் இடம் வலம் தெரியாம அலம்பீனம் இனி நன்மை தீமைகளுக்குப் போகாம இருந்தாத்தான் சரி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகாவின் பெருமூச்சு அவனைச் சுட்டது.

" அப்புவும் ஒடித்தான் திரியிறார். எங்கட பகுதியிக்க அவர் கட்டி இருக்கிற மனக் கோட்டைக்கு ஏத்த மாப்பிளை இல்லை.."

சோக மேகங்கள் அம்பிகாவின் முகத்தில் குவிந்தன. தங்களது மேம்பாட்டிற்குத் தேவையானதை அந்நியப்படுத்தி தங்களது சமூகத்தை அடக்கி வாசித்துக் கொண்டிருக்கும் ஈனத் தனங்களை உயிர்ப்பித்து அவள் நெஞ்சு கொதித்தது. இந்த அயோக்கியத் தனங்களின் விளைச்சலால் தன்னைப் போன்ற பல பெண்கள் வாழாவெட்டியாகிக் கொண்டிருப்பது குறித்துப் பொருமினாள்.

கந்தபுராணக் கலாசாரம் அப்பிப் பிடித்துக் கொண்டிருக்கும் அந்த மண்ணில் கே. டானியலின் பஞ்சமர் இலக்கியம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. சாதி ஒழிப்பு, வெகுஜன இயக்கம், சாதித் திமிர் கொண்ட உன்மத்தர்களுக்கெதிராக ஒரு காத்திரமான வியூகத்தை உண்டாக்கி இருந்தது. மனித குலம் தலைகுனியும் அளவிற்கு சாதியத்தை வளர்த்து விட்டிருந்த அப்பூமியில் சினந்தெழுந்த பஞ்சம் இலைஞர்கள் சாதி ஒழிப்புப் போராட்டங்களைப் புத்தம் புதிய பரிமாணங்களில் அரங்கேற்றிக் கொண்டிருந்தனர். அந்த நீரோட்டத்தில் சின்னக்கண்டனும் சங்கமித்திருந்தான்.

"நாங்கள் நெடுக அம்பிகா, வெள்ளாளரில் தான் சாதியை உரைச்சுப் பாக்கிறம்..." கனவொன்றை கண்டு விழித்தவன் போல் சின்னக் கண்டன் சொன்னான். அம்பிகாவுக்கு புதினமாகப்பட்டது. இந்தத் தளம்பலின் ரிஷிமூலத்தை தேடும் நோக்கில் அவள் சொன்னாள்.

"தமிழ் நாட்டில் சகல துறைகளிலும் பிராமணன் இருந்து உறுக்காட்டிக் காட்டிறான். இஞ்ச ஆரு.... வெள்ளாளன் தானே எங்களுக்கு நடப்புக் காட்டுகிறான். எங்களைச் சுரண்டிறவை அவைதான். அப்ப அவை தானே எங்கட சத்திராதி..."

" சாதி பாக்கிறது வெள்ளாளன் மட்டும் தானா? எங்கட பஞ்சமருக்க இல்லையா?

இருட்டில் மின்மினி பறந்து வந்தது போலிருந்தது. அம்பிகாவின் கபாலம் செயலிழந்தைப் போன்றிருந்தது.

"இவர் என்ன கதைக்கிறார்.." சிலையாகச் சமைந்தாள். அவன் பார்வை அவளைச் சுட்டு வாட்டியது.

"எங்களை தாழ்த்துகிறவையைத்தான் நெடுக லைற் அடிச்சுப் பாக்கிறம்... ஆனால் நாங்களும் சிலரைத் தாழ்த்திறது தெரியாமலிருக்கு..." பேச்சை இடை நிறுத்திச் சின்னக் கண்டன் மூச்செறிந்தான் மிச்சப் பேச்சைக் கேட்டு அம்பிகாவின் மனம் துருதுருத்தது.

"இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் பஞ்சமரென்ன குறைஞ்சவையா? அவைக்குள்ளையும் சாதி ஒடுக்குமுறை இருக்குத்தானே." புதிய அத்தியாயம் ஒன்றினுள் தாம் பயணித்துக் கொண்டிருப்பது அம்பிகாவிற்குத் துல்லிமாகியது.

பஞ்சமருக்கயும் இருக்குத்தான்." அம்பிகாவின் சிந்தனை சின்னக்கண்டனோடு இசைந்து நின்றது.

"பஞ்சம சமூகங்களுக்கு எத்தினை கலப்புத் திருமணம் நடந்திருக்கு உள்ளதைத்தான் சொல்லுறன். பஞ்சமரே அஞ்சு சாதியையும் வேற வேறாத்தான் வைச்சிருக்கினம். இவை ஒண்டு சேந்து ஒரே ஆக்களாகினா என்ன?

" அப்ப ஒண்டு சொல்லட்டுமே!" வானத்தை ஊடறுக்கும் மின்னல் போல் அம்பிகாவின் முகத்தில் புன்னகை பூத்தது. அவள் அந்தரங்கம் இன்னதென்பதை இனங்கண்டு கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னது?

"இப்ப சொன்ன விஷயத்தில் நீங்களே முன்மாதிரி காட்டலாமே?

குறும்புத்தனங்களை விடுத்துக் காட்டமாகச் சொன்னாள். அவனை மடக்கும் இங்கிதத்தோடு.

மயான உறக்கம் கொஞ்ச நேரம் ஆளுகை புரிந்தது

இப்படிச் சொல்லுமென்... நாங்கள் ரெண்டு பேரும் முன் மாதியாக இருப்பமெண்டு" முகத்தில் முறுவலைப் படர்த்தி சின்னக்கண்டன் அவளைப் படம் பிடித்தான். அரசல் புரசலாக விஷயம் அம்பலத்திற்கு வந்தபொழுது.

"அவையின்ர பகுதிக்கும் எங்கட பகுதிக்கும் எப்படிச் சரி வரும் அவை முழு மாடு திண்டு கொண்டு. எங்கள மாடு தின்னியளெண்டு நொடிக்கினம்..." வைராக்கிய வெப்பில் அம்பிகாவின் தகப்பன் கையைப் பிசைந்தார். நாள் போகப்போக....

" என்ர சாதீக்க மாப்பிளையா இருக்கு.. உத்தியோகமாயிருக்கு" அம்பிகாவின் தகப்பன் இளகினார்.

சின்னக்கண்டன் பகுதிக்குள்ளும் கிசுகிசுப்புகள் முளைவிட்டன. அவனுடைய தகப்பன் பனைவளவிற்குச் சீவப் போன பொழுது காணிக்காரி,

"என்னடா உங்கட கொடிகோத்திரத்தில் இல்லாத வேலை உதுக்கு நீ சம்மதித் திட்டியா...?" ஒட்டு மொத்தமாகக் காணிக்காரியை எடையிட்டிருந்த சின்னக்கண்டனின் தகப்பன்,

" பொட்டையுமென்ன பிராமணத்தி மாதிரி. என்ர புள்ளையுமென்ன தூக்கிக் கொண்டு போய் வைச்சிருந்து போட்டா கட்டித்தாவெண்டு நிக்குது. என்ர முகம் கறுக்க நடந்திருக்க மாட்டான். அவளைத்தான் வேணுமெண்டா முடிக்கட்டும்."

கள்ளுக் கோப்பரேசன், சந்தை, தெருச் சந்தி இப்படி ஏப்பிட்ட இடமெல்லாம் மறித்து விடுப்புக் கேட்டவைக்கு நெத்தி அடி!

பெருமெடுப்போடு திருமணம் நடந்தது. கொட்டகைப் பந்தல், இணுவில் மணவறை, வதிரி நட்டுவ மேளக்காரர்.. காரியாதிகாரியின் தலைமை... இந்த அபூர்வ திருமணத்தின் தரிசனத்தில் இரு சமூகங்களும் கிறங்கிப் போயிருந்தன.

இவர்களுக்கு இப்பொழுது ஆணும் பெண்ணுமாய் இரு பிள்ளைகள்.

* * *

தட்டிப் பந்தலுக்குள் வெற்றுக் கதிரைகள் இருந்தன. பிரேதத்திற்கு அண்மையில் பெண்கள் ஒப்பாரி பாடிக்கொண்டிருந்தனர். உடம்பைச் சுவரில் சாய்த்து தலையில் கையை வைத்தபடி இழப்பின் தாக்கம் முகத்தில் துலங்க அம்பிகா குந்தி இருந்தாள். காத்தலிங்கமும் பூலனும் வருவது தெரிந்தது. எழுந்து நடந்தாள். இரண்டறை வீடு. விசாலமான விறாந்தை. பிரேதம் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தது. அஞ்சலியைச் செலுத்துவது போல் பூலனும் காத்தலிங்கமும் பிரதேதத்தின் கால் மாட்டில் மௌனித்து நின்றனர். தலை மாட்டில் குத்துவிளக்கு, ஊதுபத்தி எரிந்து கொண்டிருந்தன.

"வந்திருங்க" அம்பிகாவின் தொண்டை கட்டி இருந்தது. கதிரைகளில் அமர்ந்து கொண்டனர். எதிரில் கதைப்பதற்கு வசதியாக அம்பிகா இருந்தாள். இவர்களுக்குச் சற்றுத்தள்ளி கைக் கெட்டும் தூரத்தில் முதியவரொருவர் வெண்ணிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்து மயிர் சிலிர்த்திருந்தது. உதட்டிற்குக் கீழ் செம்பட்டை.. சதை கரைந்த சருமம் காத்துப் போன பலூன் போல் சுருக்கங்கள் காட்டியது.

பூலனையும், காத்தலிங்கத்தையும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு அவர்கள் புதியவர்கள். முதியவர் எழுந்து கதிரை மேல் வைக்கப்பட்டிருந்த வெற்றிலைத் தட்டதை எடுத்தார்.

"சின்னக்கண்டன் பெட்டி மேளத்துக்கா போட்டுது?" காத்தலிங்கம் கேட்டவுடன் அம்பிகாவின் முகம் சந்திரனைப் புகார் கொளவியது போல் மேலும் வாடிக் கரித்தது. நிலத்தை நோக்கினாள். அன்றைய தினம் புதன்கிழமை.

"அவருக்கு லீவு குடுக்க இல்லையோ? பூலன் தான் விசாரித்தான். பேசாமடந்தையாக அம்பிகா மௌனத்தை நீட்டினாள்.

புரிசன் பொஞ்சாதியிக்க கதவளியாக்கும். கலகலப்பாகக் கதைக்கும் சுபாவமுடைய அவள் அப்படி வித்தியாசம் காட்டியது காத்தலிங்கத்தை உரத்துச் சிந்திக்க வைத்தது.

"எடுக்கிறது நாளைக்குத் தானே..." பூலன் சுருதியை மாற்ற எத்தனித்தான்.

"ஓம் நாலு மணிக்கு" அம்பிகாவின் பேசா நோன்பு கலைந்தது.

"எங்கட வாசிகசாலைப் பொடியளோட நாளைக்கு வருவம்" கதிரையை விட்டுப் பூலன் எழுந்தான்.

உள்ளங்கைக்குள்ளிருந்த வெற்றிலைக் கூட்டைக் கசக்கியபடி முதியவர் பத்திரிகை நிருபர் போல் சகலத்தையும் மனப்பதிவு செய்து கொண்டிருந்தார்.

"சரி.. சரி.. போய் பார்க்க வேண்டிய கருமத்தைப் பாருங்க" காத்தலிங்கமும் எழுந்து பூலனோடு சேர்ந்து கொண்டான். இருவரும் தெருப் படலையை நோக்கி நடப்பதை அம்பிகா பார்த்தபடி நின்றாள். கொட்டுப் பனையடியில் நிற்பாட்டப்பட்டிருந்த சைக்கிள்களைத் தள்ளி உருட்டினர்.

"இஞ்ச கொஞ்சம் நில்லுங்க..." வேலிக் கரையில் கொழிச்செனத்துப்பியபடி முதியவர் நடந்து வந்தார்.

"ஏனென அப்பு.." திரும்பிக் கேட்டான் பூலன்

"கிளாக்கரிட்டயா வந்தனியள்.." முதியவருக்கு மூச்செறிந்தது அனுங்கினார்.

"ரெண்டு பேருக்காகவுந்தான் வந்தம் ." தம்பதியைச் சமநிலைப்படுத்திக் காத்திலிங்கம் சொன்னான்.

கிளாக்கரைக் கச்சேரியில போய்ப் பாருங்க.

"பிரேதமெடுக்கேக்க நாளைக்குச் சின்னக் கண்டன் நிப்பான் தானே.:.. காத்தலிங்கம் வினயமாகக் கேட்டான்.

"சாய்... என்ன மோனை... இவையளோட எம்மட்டுக் காலப்புழுக்கம்."

"இண்டைக்கு நேற்றைக்கிருந்தில்லை அப்பு. படிக்கிற கால்த்திலிருந்து" பூலன் விலாசம் எழுப்பினான்.

"அப்ப உங்களுக்கு இன்னும் இவைய விளங்கேல்ல" முதியவர் அவர்களை நக்கி எள்ளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படி என்ன அப்பு இவையிக்க கிடக்கு? தன் நெஞ்சுப் புற்றுக்குள் எதையோ வைத்து அவர் தடுமாறுகிறாரெனக் காத்தலிங்கம் அனுமானித்தான்.

"இவையட எந்த நன்மை தீமைக்குக் கிளாக்கர் நிண்டவர்" காத்தலிங்கத்தையும் பூலனையும் முதியவர் மாறிமாறிப் பார்த்தார்.

" நான் அம்பிகாவின்ர பெரிய தேப்பன்"

தான் சொல்வதின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அவர் தன்னை அடையாளப்படுத்தினார்.

"அந்த சம்மந்தம் வேணாமெண்டு நான் அப்ப சொன்னன்.... உத்தியோகத்துக்கு எல்லாத்தையும் மறைச்சிடலாமெண்டு நினைச்சீனம் ..... கிளாக்கர் அம்பிகாப் பொட்டையை எடுத்ததோட தொடுசலை முடிச்சுப் போட்டார்..." தன் நாச்சொல் பலித்ததை முதியவர் சிறிது கடுப்போடுதான் காட்டிக் கொண்டார். அவர் சொன்னதைக் கேட்டதும் காத்தலிங்கத்தின் நெஞ்சு கொதித்தது.

"சரி அப்பு...அப்படியோ சங்கதி... வாறம்..." சைக்கிளை வீச்சாக உருட்டியபடி காத்தலிங்கம் பயணம் சொன்னான். பூலன் பேயோட்டம் ஓடி காத்தலிங்கத்தோடு சேர்ந்து கொண்டான்.

"அப்பு சொன்னதைக் கேட்ட தானே... சின்னக்கண்டன் தரவளி தங்கட காரியத்துக் காத்ததான் பஞ்சமருக்காக உருகீனம். பஞ்சமரின் முன்னேற்றம் கருதி இல்லை".

காத்தலிங்ககத்தின் மனதில் ஆதவன் மையங் கொண்டிருந்தது.

"சின்னக்கண்டனை இனிக் கைகழுவ வேணும். எங்கட கொண்டாட்டங்களுக்குக் கூப்பிடக் கூடாது..."

பூலனால் காத்தலிங்கக்கத்தை மறுதலிக்க முடியாதிருந்தது. உண்மையைக் கிரகித்துத் தீர்வை ஏற்றுக் கொண்டான்.



# அஞ்சலி

மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் ஏ.இக்பால் அவர்களின் மறைவு உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவர்தம் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், இலக்கிய நெஞ்சங்களுக்கும், 'தாயக ஒலி' தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரைப் பேணுவோம்

இயற்கையாய் வந்ததே இளமையும் முதுமையும்
செயற்கையாய் வகுத்தே பழசும் புதுசும்
ஒரு முறையே வரும் பருவங்கள் - அவை
மறு முறையும் வாராத துருவங்கள்

வாய்த்த இளமைக்கும் வந்த முதுமைக்கும் அழகுண்டு
காய்க்கும் கனிக்கும் காட்சியில் அழகு உண்டு
விருப்போடு வரவேற்கிறோம் இளமையை ஏனோ
வெறுப்போடு எதிர் கொள்கிறோம் முதுமையை.

துளிர்த்த இளமையும் தூய்மையான காட்சிதான்
பழுத்த பருவங்களும் பார்வைக்கு மாட்சிதான்
வெளுத்த மனத்தோடு வெறுப்பின்றி நோக்குவோம்
அழுத்தமான சிந்தனைகள் அடிமனதில் தோன்றுமே.

சிசுக்களுக்கு பராமரிப்பு சிற்றில்லங்கள் வயதான
பெரிசுகளுக்கு முதியோர் பேரில் இல்லங்கள்
நாகரீகமாம் இவை நம் நாட்டிலும் - அந்தோ
வேகமாக அழிகிறது மனிதநேயம் வேதனையே

முன்னாளில் முதியோர் இல்லத்தில் தள்ளிவிட்டு
பொன்னான தந்தையவர் போய்விட இல்லம் போய்
அன்னாரின் இல்லத்தில் கிரியையென்று கொணர்ந்து
என்னமாய் கறக்கிறார் வெளிநாட்டுப் பணத்தை.

மன்னனாய் நீ மணிகுடம் சூட்டினாலும் மறவாதே
அன்னைக்கும் அப்பனுக்கும் மகன் நீயே அதனாலே
சொன்னார்கள் பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு
என்னாளும் மறவாதே தெய்வம் அப்பனும் அம்மாவுமே.

சாதனைகள் புரிந்து நேற்று ஆச்சரியக் குறிகளானார்கள்
வேதனைகள் சுமந்து இன்று கேள்விக் குறிகளானார்கள்
சோதனைகள் கடந்து சொந்த வாழ்வு சிறக்க - அவர்தம்
போதனைகள் கேட்போம் பொறுமையாய் பணி செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நையாண்டிபண்ணி குருத்தோலை நன்றாய் சிரிக்கிறது
ஐயோ உனக்குமிதுதான் அலறுகிறது காவோலை
பொய்யான வாழ்விது பொறுமையாய் புரிந்துகொள்ளுங்கள்
செய்யாதீர் துரோகம் சிலநாளில் நீங்களும் முதியோரே

நோயுற்றார் நொந்து விட்டார் நொடிந்து விட்டார்
பாயிலே படுத்து விட்டார் இவரால் பயனில்லையென்று
புதுஉலகு புதுவாழ்வு உங்களுக்கென்று புழுகாதீர்
முதுமையுண்டு மூப்புமுண்டு முடிவுமுண்டு உங்களுக்குமே.

உயிருக்கோ உணர்வுக்கோ முதுமையில்லை பெரியோர்
துயருக்குள் வீழ்ந்திடாமல் சுதந்திரமாய் வாழ்வதற்கு
உரிமையுண்டு உத்தரவாத முண்டு உணர்ந்து கொள்ளுங்கள்
பரிவுகொண்டு பாசம்கொண்டு பராமரிப்போம் பெரியோரையே!

**நா. தியாகராசா**
**திருநாவற்குளம், வவுனியா**

# "குரலற்ற மனிதர்கள்"

குடியுரிமையும்
வாக்குரிமையும்
பறிக்கப்பட்ட போதும்,

கலப்புக் குடியேற்றங்கள்
உருவாக்கப்பட்ட போதும்,

மொழியுரிமை
பறிக்கப்பட்ட போதும்,

இனக் கலவரங்கள்
அரங்கேற்றப்பட்ட போதும்,

இறுதியுத்தத்தின் போது
பல்லாயிரக்கணக்கான மக்கள்
படுகொலை செய்யப்பட்ட போதும்,

எதனையும் தடுத்து நிறுத்த
எமக்கு முடியாமற் போனது.


ஏனென்றால்,
நாங்கள் குரலற்ற மனிதர்கள்!

**கவிஞர் கா.தவபாலன்**
**கோண்டாவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுக்கோட்டையாரின் மனது



தஞ்சை மாவட்டத்தில் பிறந்த மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 'கண்ணின் மணிகள்' என்ற நாடகத்திற்கு 1954 இல் எழுதிய பாடலில்,

**"தேனாறு பாயிது செங்கதிரும் சாயுது**
**ஆனாலும் மக்கள் வயிறு காயுது"**


என்ற கவிதை வரிகளை எழுதினார். இந்த வரிகளை அவர் எழுதிய போது, காவிரியில் தண்ணீர் தட்டுப்பாடின்றி ஓடிக்கொண்டிருந்தது. வயல்களும் வஞ்சகமின்றி வாரி வழங்கிக் கொண்டிருந்தன. அப்படிப்பட்ட சூழலில் கூட உழைக்கும் மக்களின் வயிறு காய்ந்து கொண்டிருந்ததை மக்கள் கவிஞர் கண்டுணர்ந்து பதிவு செய்தார்.

'கண்ணின் மணிகள்' நாடகத்தில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் எழுதியதோடு போலீஸ்காரராகவும் வேடமேற்று நடித்தார். இந்த நாடகத்தின் ஒருகாட்சியில் போராட்டம் நடத்தும் விவசாயிகளை (போலிஸ்காரர் வேடமேற்றிருந்த) மக்கள் கவிஞர் அடித்து விரட்ட வேண்டும். ஆனால் விவசாயிகளை, மக்கள் கவிஞர் தடிகொண்டு அடித்து விரட்டாமல் கையைக் கொண்டு விவசாயிகளைத் தள்ளியிருக்கிறார். இதைக் கண்டு நாடகம் பார்த்த விவசாயிகள் சிரித்திருக்கின்றனர். அதுபற்றிக் கேட்ட போது, மக்கள் கவிஞர் "நாடகத்தில் கூட விவசாயிகளை அடிக்க எனக்கு மனசு வரவில்லை" என்றாராம். என்னே அவரின் மனசு.

**- தேடலோன்**

o o o

# எழுத்துச் சிகரம் தந்த கடைசித் தொடர்



1940 முதல் 1971 வரை நேர்ந்த வெவ்வேறு தளங்களைச் சார்ந்த அனுபவங்களை "ஒர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்" என்றும் "ஒர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள்" என்றும் எழுதி விட்ட பிறகு, மூன்றாவதாக 'ஒர் இலக்கியவாதியின் ஆன்மீக அனுபவங்கள்' என்று எழுதினார் ஜெயகாந்தன்.

குழந்தைப் பருவத்தில் தன் தாயுடன் முருகன் கோவில் விசேஷ பூசைகளுக்குச் சென்ற முருகேசன் என்ற ஜெயகாந்தன் என்ற சிறுவன், கும்பலில் காணாமல் போய், அதன்பின் குளத்தில் விழுந்து தத்தளித்த அந்தச் சிறுவனைக் இராமலிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரம் காப்பாற்றி, அவனுடைய தாயிடம் ஒப்படைத்து, "அம்மா தாயே! இது உன் பிள்ளை இல்லை. அது போயிடுச்சி குளத்தோட. இது முருகன் கொடுத்தது. இந்தா தாயே! ஜாக்கிரதையா காப்பாத்து" என்று சொன்னது பற்றி ஆரம்ப அத்தியாயத்தில் எழுதினார். அதுபோன்ற ஒருசில நிகழ்வுகளைத்தான் தன்னுடைய ஆன்மீக அனுபவங்களாக ஜே.கே யால் இந்தத் தொடரில் சொல்ல முடிந்தது. ஆனால் அந்தத் தொடரின் பெரும் பகுதியில் ஜே.கே.தன்னுடைய அரசியல் அனுபவங்களைத் தான் பதிவு செய்தார். அதற்குச் சான்றாக சிலவற்றை மட்டும் இங்கே தர முடியம்.

"தன்னந் தனியனாய் அந்தப் பத்துவயதுச் சிறுவன் பெற்றோர் இருந்தும் ஓர் அனாதையாய் உபசரித்து அன்பு காட்ட உறவினர்கள் இருந்தும் அவர்களை எல்லாம் விட்டு சமூகத்தொண்டு புரிகின்ற ஓர் இயக்கத்தில் முழுநேர ஊழியனாகத் தான் உருவாகி வருவதாக உணர்ந்து 1946 ஆம் வருடம் விழுப்புரம் கம்யூனில் தங்கியிருந்த போது, தஞ்சை, விழுப்புரம், சிதம்பரம், கடலூர் என்று ஓர் ஆண்டுக்குள் பல இடங்களில் மாறி மாறி வாழ நேர்ந்ததால் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. விழுப்புரத்தில் அவர் வந்து சேர்ந்த இடம் முழுநேரம் கம்யூனிஸ்ட் ஊழியர்கள் சேர்ந்து வாழ்ந்த ஒரு சிறிய கம்யூன். அவரது தாய் மாமன் புருஷோத்தமனும் அவரது துணைவியார் ராஜாம்பாளும் ஒரு கம்யூனிஸ்ட் முழுநேர ஊழியர்கள். இன்னும் சில தொழிற்சங்கத் தோழர்களும் அந்தக் கம்யூனில் இருந்தார்கள்."

சென்னையில் அவருக்குப் புகலிடம் அளித்தது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகம். அந்தத் தலைமையகத்தில் தான் ஜனசக்தி அச்சகம், தமிழ்மாநில தலைமைக்குழு, முழுநேர ஊழியர்கள் தங்கி வாழும் கம்யூன் அனைத்தும் அமைந்திருந்தன. வெளிமாவட்டங்களிலிருந்து பல புதிய தோழர்கள் முழுநேர ஊழியர்களாகிக் கட்சிப் பணிபுரிய அணி அணியாக வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவராகவே பாலபருவத்தைக் கடக்காத முருகேசனும் அங்கீகரிக்கப்பட்டார். அந்த அங்கீகரிப்பு முருகேசனை புதிய மனிதனாக ஊருவாக்கியது. தோழர் ஜீவாவின் தூண்டுதலால் ஏற்பட்ட கம்பராமாயண நாட்டம் அப்போது அவரை பிடித்தாட்டிக் கொண்டிருந்தது. கம்பராமாயணம் முழுவதும் ஆறுகாண்டங்களும் அங்கே படித்து முடிக்க வாய்ப்புக் கிடைத்தது. இதேபோன்று தன்னுடைய ஆன்மீக அனுபவங்களைத் தொடராக எழுதுகின்ற போது கூட ஜெயகாந்தனால் கம்யூன் வாழ்க்கையையும் கம்யூனிஸ்டுக்களால் தாம் பெற்ற வாழ்க்கை அனுபவங்களையும் சொால்லாமல் இருக்க முடியவில்லை. 'நன்றி மறப்பதே நன்று' என்று ஓடிக்கெண்டிருக்கும் இந்த சமூகத்தில் 'நன்றி மறப்பது நன்றன்று' என்று வாழ்ந்துகாட்டிய சிறப்பு ஜெயகாந்தனுக்கு உண்டு. அதற்கு அவர் எழுதிய 'ஓர் இலக்கியவாதியின் ஆன்மிக அனுபவங்கள்' என்ற தொடரும் சான்றாகும். இந்தத் தொடர்தான் ஜெயகாந்தன் பத்திரிகையில் எழுதிய கடைசித் தொடராகும்.

**நன்றி - மேன்மை**

O O O

# கஸ்தூரிரங்கனும் கணையாழியும்

# (1933-2011)

கஸ்தூரிரங்கன் 1960-70 களில் சுதேசமித்திரனில் பல அரசியல் கட்டுரைகளை எழுதினார். டில்லியிலிருந்து சென்னை வந்தபிறகு தினமணி, தினமணிக்கதிர் பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். கஸ்தூரிரங்கன், சி.சு.செல்லப்பா வெளியிட்ட 'எழுத்து' பத்திரிகையில் கவிதைகள் எழுதியிருக்கிறார். செல்லப்பா தொகுத்த புதுக்குரல்களில் அவரது கவிதை ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து போல ஆனால் சற்று விரிவான வாசகர் கவனம் பெறக்கூடிய ஒரு பத்திரிகை வேண்டும் என்று அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும். அதன் பலனாக 1965 இல் கணையாழி தொடங்கப்பட்டது.

கணையாழியில் முதல் தொடர்கதை எழுதியவர் சி.ஆர்.கண்ணன். இரண்டாவது தொடர்கதையை ஆயுர்வேத வைத்தியரான ஸ்ரீஹரி எழுதினார். லா.சு.ரங்கராஜன் படங்களும் வரைந்து கதைகளும் எழுதினார். 1970 அளவில்த்தான் கணையாழி சற்றுக் கவனமாகப் படிக்கப்பட்டது. இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' ஒரு முக்கிய காரணம். பின்னர் தி.ஜானகிராமன் 'மரப்பசு' எழுதினார். பிரபஞ்சன், திலீப்குமார் போன்றவர்கள் எழுதிய சிறுகதைகள் பரிசுகள் பெற்றன. சிறிதுகாலம் மலர் மன்னன் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட வழிநடத்தினார். மாதப் பத்திரிகையானாலும் அதில் பலர் ஆசிரியப் பணியாற்றினார்கள். திருப்பூர் கிருஷ்ணன், தேவகி குருநாத் துடிப்போடு பங்கேற்றார்கள்.

தான் நடத்துகின்ற பத்திரிகையும் அதில் பங்கேற்கும் எழுத்தாளர்களும் ஒரு சிறிய வட்டத்தில் அடங்கிவிடக்கூடாது என எண்ணியவர் கஸ்தூரிரங்கன். ஆனால் கணையாழியில் ஒரு கவிதை வந்தால் கொலரைத் தூக்கிக் கொண்டவர்கள் அநேகம்.சுஜாதா, பாலகுமாரன் போன்றவர்கள் ஜெகுஜனப் பத்திரிகைகளோடு ஒன்றிப் போனாலும் கணையாழி தொடர்பு அவர்களுக்கு மதிப்பூட்டியது.

கணையாழியானாலும், தினமணியானாலும் ஒரு விரிந்த தளத்தை அமைத்தவர் கஸ்தூரிரங்கன். ஏராளமான எழுத்தாளர்களின் படைப்புக்கள் அச்சேறக் கஸ்தூரிரங்கன் காரணமாயிருந்தார். அவர் தோற்றுவித்த கணையாழி, பல பரிமாணங்கள் அடைந்து மீண்டும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

**அசோகமித்திரன்**

**(நன்றி-காலச்சுவடு 2011)**

---

*"படைப்பாளன் என்பவன் எப்போதும் தனது படைப்புச் சார்ந்த சுயசிந்தனையோடும் இலக்கியம் சார்ந்த அனுபவத்தோடும் தான் பார்க்கும் அனைத்து விஷயங்களையும் தனக்காக, தனது படைப்பிற்கான அழகில் கூறுகளை இலக்கியத்தின் துணையுடன் பொருத்திப் பார்க்க வேண்டும்.* **- நடிகர் நாசர்**

---

## உன்னதமான மிகச்சிறந்த பரிசு

"குடும்பங்கள் மனிதர்களுக்குக் கிடைத்த உன்னதமான மிகச்சிறந்த பரிசு ஆகும். இவ்வுலகை மனிதாபிமானம்மிக்கதாக உடன் பிறந்த உணர்வு கொண்டதாக மாற்றுவதற்கு குடும்பங்களே தலைசிறந்த புளிக்காரமாகச் செயலாற்ற வேண்டும். அரசியல், பொருளாதாரம் மத நம்பிக்கை ஆகிய உலகங்கள் உறுதியாக நன்னெறி வழிகளில் செயலாற்ற குடும்பங்களில் நிலவும் சூழல்கள் உதவியாக இருக்க வேண்டும்.

குடும்பங்களை அன்பின் அடிப்படையில் கட்டியெழுப்பாமல் வெளி உலகின் கட்டுமானங்களை உறுதிப்படுத்த முடியாது. குடும்பம் என்ற அடிப்படைக் கட்டுமானம் சிதைந்து வருவது ஐரோப்பிய நாடுகள் சந்திக்கும் பெரும் சவால் என்றும். குடிபெயர்தல், வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஆகியவை ஐரோப்பிய சமுதாயம் அவசரமாகத் தீர்க்க வேண்டிய நெருக்கடிகளாக உள்ளன.

**- திருத்தந்தை பிரான்சிஸ்**


**பரிசுத்தபாப்பரசர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து.சிவசுப்பிரமணியம்

# தங்கத் தாத்தா நாவலியூர் க.சோமசுந்தரப்புலவர்



*"செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்*
*தெய்வத் தமிழ் மொழிச் சீரினைத் தேரீர்*
*அந் தமிழெம் மொழி மாதா - படும்*
*அல்லைத் தீர்க்க அறிவு வராதா"*

- 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவனின் ஆதங்கம்

யாழ்ப்பாணத்து 'தங்கத் தாத்தா' நாவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் அவர்கள் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் பெருமைபெற்ற பெருமகனாக மதிக்கப்பட்டார்.

"சங்க நூற்புலமையும், சமயக் காப்பியத் தேர்ச்சியும் சைவ சித்தாந்த வேதாந்த நுணுக்கமும், வடமொழிக் கல்வியொடு வாய்க்கப் பெற்ற முதுபெரும் புலவர்களான ஆறுமுகநாவலர், அருட்டிரு விபுலானந்த அடிகள், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் போன்ற ஈழப்புலவர் வரிசையில் தோன்றித் திருத்தக வாழ்ந்து பல்லாயிரக்கணக்கான செந்தமிழ்ப் பாக்களைப் பொழிந்திலங்கியவர் எமது நவாலியூர் சோமசுந்தரப் புலவர் என்றால் மிகையாகாது என்று முன்னாள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

சோமசுந்தரப் புலவரின்பால் கேண்மை பூண்டு, அன்னாரின் செந்தமிழ்ப் புலமைச் சிறப்பினை மெச்சியும் புகழாரஞ் சூட்டியும் வந்தவர்களில் மறைமலை அடிகளார், பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார், வித்துவான் ம.அருணாசலம்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கலைமாச் செல்வர் ச.அருணந்தி, கவிஞர் தேசிகவிநாயகம்பிள்ளை, தமிழ்த்தூது தனிநாயம் அடிகளார், பண்டிதர் கா.பொ.இரத்தினம் ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

வாய்திறந்தால் வண்ணம்பாடும் வளவிய புலமை குலவிய சோமசுந்தரனார் சிறுவர்க்கும், சிந்தனையாளர்கட்கும், பக்திமையுடையார்க்கும் எனப் பன்நூல்கள் இயற்றியுள்ளார். சூரிய வழிபாடு, உயிரிளங்குமரன் நாடகம், என்பவற்றுடன் சிறுவர் செந்தமிழ், இலங்கை வளம், தாலவிலாசம், மருதன் அஞ்சல் ஓட்டம், தந்தையர் பதிற்றுப்பத்து முதலிய ஐந்து பகுதிகளைக் கொண்ட 'செந்தமிழ்அமுதம்' என்னும் நூல், கலைவளம், கருத்துநலம் பொதிந்தும், கண்கவர் காட்சிகள் ஒருபுறம், வண்ணமையும் ஒருபுறம் எனப் பண்டிதர்கள் இவரின் நூல்களைப் பாராட்டி உரைத்துள்ளனர்.

கதிர்காமர் - இலக்குமிப்பிள்ளை தம்பதியினரின் தவப்புதல்வனாக 25.05.1878 இல் அவதரித்த சோமசுந்தரப்புலவர் தலைசிறந்த உபாத்தியார்களிடம் சிறுவயது முதலே பல பாடங்களையும் கற்றுத்தேறினார். மேலும் சோமசுந்தரனார் தமது தந்தையாரிடம் கந்தபுராணம், திருக்குறள் போன்ற நூல்களையும் பொருளுணர்ந்து கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதிலேயே இவரின் அருவி நீரோட்டம் போன்ற ஆணித்தரமான பேச்சாற்றலையும் விவாதத் திறமையையும் கருத்தினை ஈர்க்கும் கண்டங்களையும் பலர் மெச்சத்தக்க வகையில் ஆற்றியும் வந்துள்ளார். வெண்பா இயற்றுவது, விருத்தப்பாடல்களைப் பாடுவது இவரது கைவந்த கலையாக அமைந்தது.

தமிழில் ஆர்வமுள்ள இளைஞருக்கும் ஆசிரியர்களுக்கும் செய்யுள் இயற்றப் பழக்குவதிற் புலவருக்கு மிகுந்த விருப்பம். "செய்யுள் இயல்பாகப் பிறத்தல் வேண்டும். வலிந்து எதுகை மோனைகளை அமைத்துக் கட்டடமாக்க வரமாட்டாது. "காதும் மனமும் கூர்மைப்பட்டு அமைதல் வேண்டும்" என்று அறிவுரை பகர்வர். எந்நேரமும் கற்பனைப் பாடல்களை இயற்றிப் பாடி மகிழ்வதும் நகைச்சுவை ததும்பச் சல்லாபிப்பதும் அவரின் போக்காக இருந்ததுடன், சமுதாயத்தில் சீர்திருத்த விழிப்புணர்வை ஏற்படுத்தப் பல நாடகங்களையும் சல்லாபங்களையும் எழுதிப் பிள்ளைகளைக் கொண்டு நடிப்பித்தும் வந்தார்.

எதுவித எதிர்பார்ப்புக்களையும் கருதாது இல்லம் தேடித் தமிழ் படிக்க வருவோருக்கெல்லாம் உணவளித்துத் தங்கும் வசதியும் செய்து கொடுத்துத் தமிழைப் பரப்பி வந்தமை அவரின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. புலவர் தமது எழுபத்தைந்தாவது அகவையில் 1953 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

'சிறுவர்செந்தமிழ்' என்னும் இவருடைய நூல் சிறுவரிடம் ஒல்லும்வகை அழகியல் உணர்வை பிறப்பிப்பதோடு சிறந்த அறிவுக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. பழுத்த ஓசைநயமும், மணியனைய செஞ்சொல் வளமும், அழகிய பொருட் சிறப்பும் நிறைந்திருத்தலின் இதனைச் சிறுவர் எளிதிற் கற்று இன்பம் அடைவர்.

*"ஆடிப் பிறப்பொடு கத்தரித்தோட்டமும்*
*ஆக்கியளித்த புலவர் பிரான்*
*தேடக் கிடையாத தென்னிலங்கை வளன்*
*தேன்சொரியுந் தமிழ் மாந்துதுமெ"*

என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

சிறுவர் இலக்கிய வரிசையிலே பல அற்புதமான படைப்புக்களை சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் யாத்துத் தந்துள்ளார் எங்கள் தங்கத் தாத்தா.

*'தாடியறுந்த வேடன்' என்னும் கதையில்*

*வீமா! வீமா! ஓடி வா வா - அணில்*
*வேட்டைஆடிப் பிடித்தூட்டுவேன் வா வா*

என்று நாயை அழைப்பதாகப் பாடல் வரிகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பவளக் கொடி' பற்றிய பாடலில்,

பருத்தித்துறை யூராம்
　　பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
　　பாலெடுத்து விற்பாள்
அங்கவட்கோர் நாளில்
　　அடுத்ததுயர் கேளிர்

என்று தொடருகிறது அந்தப் பாடல்.

மிகவும் பிரபலமான அவரது பாடல்கள் எல்லோர் மனங்களிலும் பதிந்துள்ளது.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
　　ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
　　கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"

'கத்தரி வெருளி' என்ற பாடல்

"கத்தரித்தோட்டத்து மத்தியிலே நின்று
　　காவல புரிகின்ற சேவகா! நன்று
காவல் புரிகின்றசேவகா!
　　மெத்தக் கவனமாய் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்? உன்னைப்போல்
　　வேலை புரிபவன் வேறுயார்"

போன்ற பலவகைப்பட்ட சிறுவர்களுக்கான பாடல்களை தங்கத்தாத்தா தந்துள்ளார்.


## 'தாயக ஒலி' சந்தா விபரம்

ஒரு வருடச் சந்தா : ரூபா 900(அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு : $30(U.S), £20(U.K)

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

**திருமலை பாலா**
(Thirumalai Bala)
London
07956486014

**வங்கிக் கணக்கு விபரம்**
T.Sivasupramaniam
A/C No : 8100086490
Commercial Bank
Wellawatte, Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமகால நவீன தமிழ் இலக்கிய சிந்தனைகள்

தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளர் திருமிகு எஸ். இராமக்கிருஷ்ணன் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்ககத்திற்கு வருகைதந்து "சமகால நாவீன தமிழ் இலக்கியச் சிந்தனைகள்" என்னும் பொருளில் உரையாற்றியுள்ளார்.

அன்று தொடக்கவுரையாற்றிய 'தாயாக ஒலி' ஆசிரியர் முன்வைத்துள்ள கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

தற்கால தமிழ்ப் படைப்புலக எழுத்தாளரான எஸ்.இராமக்கிருஷ்ணன் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான ஆக்கங்கள், திரைக்கதை, திரைப்பட உரையாடல்கள் என்று பல்துறைசார்ந்து ஆக்க இலக்கியச் செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபட்டு வருவதுடன் தமது சொற்பொழிவுகள், பத்தி எழுத்துக்கள் மூலமாகவும் சிறந்த இலக்கியப் படைப்புகளையும் திரைப்படங்களையும் அறிமுகப்படுத்துவதிலும் முன்நிற்கின்றார். தமிழ் நாட்டைப் பொறுத்தளவில் அரசியலும், சினிமாவும் இன்று ஆதிக்கம் செலுத்தும் பேசுபொருளாக இருக்கும்போது அதோடு தொடர்புபட்ட விடயங்கள் சார்ந்து மக்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களைத் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் முன்வைக்கின்றார்களா? அல்லது மக்களின் வாழ்க்கைக் கோலங்களை, பிரச்சினைகளை முன்னிறுத்தி எழுத்தாளர்கள் தமது படைப்புகளை ஆக்குக்கின்றார்களா? பொதுவாக இலக்கியங்கள் அவ்வவ் காலத்து வாழ்க்கைச் சூழலை ஒட்டியே எழுத்து வருகின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டின் சூழல் எத்தகைய இலக்கியங்களைத் தருகின்றன? அவை மக்கள் மயப்படுத்தப்படுத்தபட்டுள்ளனவா.?

இலங்கையைப் பொறுத்தளவில் கடந்த முப்பது ஆண்டுகளாக உள்நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இடப்பெயர்வு. புலப்பெயர்வு அது சம்பந்தமாக மக்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தி போர்க்கால இலக்கியங்கள் தோன்றின. யுத்தம் முடிவுபெற்ற பின் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள், அகதி வாழ்க்கையின் அலங்கோலங்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கி இலங்கை எழுத்தாளர்களும் யதார்த்தமாகத் தமது படைப்புகளை வெளிக்கொண்டு வருகின்றாகள். அதேபோல் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சொல்லணா இடர் பாடுகளை முன்னிறுத்தி இலங்கை எழுத்தாளர்கள் எழுதி வருகின்றார்கள். பெரும்பாலும் இவையே இலங்கை இலக்கியங்களின் பாடுபொருளாக இருக்கின்றன.



இந்த இடத்திலே திரு .எஸ். இராமகிருஷ்ணன் அவர்களிடம் ஒரு விண்ணப்பத்தை முன் வைக்க விரும்புகின்றேன். இலங்கையில் நடைபெற்ற யுத்தம் காரணமாகப் பல இன்னல்களை எதிர்கொண்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் 2இலட்சம் பேர் வரை கூடுதலாகவும் இருக்கலாம். தமிழ் நாட்டில் தஞ்சமைடைந்து அகதிமுகாங்களில் பலவகைப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டு அடிமைகளாகவே வாழ்வதாகத் தகவல்கள் கிடைத்த வண்ணமுள்ளன. இவர்களைப் பற்றிய விடயங்கள் பல இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் இவர்களைத் திரும்பிப்பார்க்காமல் இருப்பது ஏன்?

மேலும் திரைப்படத்துறையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற வகையிலே ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். தமிழ் நாட்டுத் திரைப்படங்களின் இன்றைய போக்கு இளம் சமுதாயத்தினரை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் காட்சிகளையே முன்னிலைப்படுத்துவதாகாவே நோக்க முடிகிறது. ஆபாசக் காட்சிகள், புகைத்தல், மது அருந்துதல், போதைவஸ்து பாவித்தல், கத்திவெட்டுகள், துப்பாக்கிச்சூடுகள், வல்லுறவுகள் போன்ற இன்னோரன்ன காட்சிகளை அநேகமான படங்களில் திரும்பத் திரும்பப் பார்க்கும் இளசுகள் உளரீதியாக அதன் பாதிப்பை அறியாமல் தம்மையும் அத்தகைய செயற்பாடுகளுக்கு அடிமையாகி விடுகின்றார்கள். இவற்றை நீக்க தமிழக் எழுத்தாளர்கள் எத்தகைய பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள்? சமுதாயச் சீரழிவைத் தட்டிக்கேட்க ஏன் முற்படவில்லை.

சஞ்சிகையைப் பொறுத்தளவில் அன்றைய காலத்திலே வெளிவந்த கல்கி, கலைமகள், ஆனந்தவிடகன் போன்றவை இலக்கியத்தரம் பேணுவதாக இருந்தன. இன்று அவையும் சினிமா இன்றி செயற்பட முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எழுத்து, சுபமங்களா, கணையாழி, தாமரை என்பனவும் ஓரளவு சிறப்பான முறையில் வெளிவந்த சஞ்சிகை களாகும். இன்று தமிழ் நாட்டில் இருந்து ஏராளம் சிற்றிதழ்கள் வெளிவருகின்றன. குறிப்பாக உயிர்மை, காலச்சுவடு, தீராநதி போன்றவை இலக்கியத்தரம் பேணுவதாக அமைந்துள்ளன. மேலும் பெருந்தொகையான நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள். கவிதைத் தொகுப்புக்கள், கட்டுரைத் தொகுப்புகள், மொழி பெயர்ப்புக்கள் என்று பல் வகைப்பட்ட நூல்கள் வெளி வருகின்றன.



தமிழ் நாட்டைப் பொறுத்தளவில் சஞ்சிகைகள், நூல்களை வாங்கிப் படிப்பதில் மக்களின் ஆர்வம் எப்படி இருக்க்கின்றது? எழுத்தாளர்களுக்குள்ள கௌரவம் உரிய முறையில் வழங்கப்படுகின்றனவா? சினிமாக் கதாநாயகர்களுக்கு கோயில் கட்டியும், ஆள் உருவ கட்டவுட்டுகளுக்கு பால் அபிஷேகம் செய்தும் தமது ஆதரவைக் காட்டும் மக்கள் எழுத்தாளர்களை எவ்விதம் நோக்குகிறார்கள் என்பவற்றுக்கான கருத்துக்களை உங்கள் உரையில் எதிர்ப்பார்க்கலாமா? கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் என்பதற்கு அப்பால் ஒரு எழுத்தாளன், சஞ்சிகையாளன் என்றவகையில் எனது எண்ணத்தில் உதித்தன் கருத்துக்களை முன்வைத்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேடு செய்ய நினைப்பவன் கெடுவான்

**(லிதுவேனியா நாடோடிக்கதை - மொழிபெயர்ப்பு)**

*"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" (திருக்குறள் 204)*

பல வருடங்களுக்கு முன்பு இரண்டு சகோதரர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவன் செல்வந்தனாக சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தான். ஆனால் இவரது சகோதரன் வறுமையோடு போராடிய வண்ணம் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வறுமையால் பீடிக்கப்பட்ட சகோதரன் மாலை நேரத்தில் வயல் வழியாக வீட்டிற்கு சென்று கொண்டிருந்தான். அப்போது அவனின் மூத்த சகோதரனின் வயலுக்குத் தானியம் நிறைந்த பைகளைக் கொண்டு போவதைப் பார்த்தான்.

"நீ யார்?" என்று ஏழை கேட்டான்

"நான் தான் உன் மூத்த சகோதரனின் அதிர்ஷ்டம்"

" என் அதிர்ஷ்டம் எங்கே?"

" உனக்கு அதிர்ஷ்டம் இல்ல. வறுமை தான் உனது விதி !"

அதிர்ச்சியடைந்த ஏழை விதியிடமிருந்து தப்பி ஓட முடிவு செய்தான். தனது வீட்டுப் பொருட்களையும், தனது மனைவி மக்களையும் வண்டியில் ஏற்றிப் புறப்பட ஆயத்தம் செய்தான். கை உறைகளை எடுக்க மறந்துவிட்டான். குடிசைக்குள் ஓடினான். யாரோ வருத்தத்துடன் அனுங்கும் சத்தம் கேட்டு "யாரது?" என்று ஏழை கேட்டான்.

" நான் தான் உனக்கு சொந்தமான வறுமை. என்னைக் கைவிட்டு விடாதே. நீ கைவிட்டாலும் நான் எப்படியாவது வந்து பிடித்துக்கொள்வேன்"

"என் வண்டியில் இடமில்லை. நீ வர விரும்பினால் இந்தக் கண்ணாடிப்பாத்திரத்தில் புகுந்து கொள். உன்னைக் கூட்டிக் கொண்டு செல்கின்றேன்"

வறுமை அவன் சொன்னபடியே செய்தது. அந்தக் கண்ணாடிப் பாத்திரத்தை ஒரு பாலத்தின் கீழ் புதைத்தான். பழையபடி தன்குடிசைக்கே குடும்பத்துடன் திரும்பி வந்து விட்டான். அதன் பிறகு நிலைமை மாற்றம் அடையத் தொடங்கியது. ஆடு, மாடு முதலியவற்றைச் சொந்தமாக வாங்குவதற்கு வசதி ஏற்பட்டது. அறுவடை முடிந்தது. ஒரு நாள் மூத்த சகோதரனை தனது வீட்டிற்கு விருந்திற்கு வரும்படி அழைத்தான். மூத்த சகோதரன் அழைப்பை ஏற்று வந்து வயிறு நிறையச் சாப்பிட்டான்.

"எப்படி உனக்கு பணம்கிடைத்தது?" என வினாவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பிடித்திருந்த வறுமையை பாலத்துக்கடியில் புதைத்த விபரத்தை ஏழை தன் அண்ணனிடம் கூறினான். அண்ணன், பாலத்துக்கு அடியில் புதைக்கப்பட்ட வறுமையை விடுதலை செய்து தனது தம்பியை வறுமையடையத் திட்டமிட்டான்.

ஏழைத் தம்பி தனது சகோதரனை சில நாட்கள் தனது வீட்டில் தங்கும்படி அன்பாகக் கேட்டான். ஆனால் அவன் அவசர வேலையிருப்பதாகக் கூறிப் புறப்பட்டான். உடனே பாலத்துக்குச் சென்று தம்பியினால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணாடிப் பேழையைக் கண்டெடுத்து வறுமையை விடுவித்தான்.


“எனது சகோதரன் பணக்காரனாக மாறியமை எனக்குப் பிடிக்கவில்லை. நீ மறுபடியும் அவனிடம் சென்று அவனை முன்போல் ஏழையாக்கிவிட வேண்டும்” என்று வறுமையிடம் கூறினான்.

வறுமை அவனுடைய மேல்சட்டையை எட்டிப்பிடித்தபடி கூறியது “உன் சகேதரனைப் பற்றி எனக்குத் தெரியும்.அவன் பொல்லாதவன். அவன் என்னைக் கண்ணாடிப் பேழையில் போட்டு மூடி ஐந்து வருட காலம் பூமிக்குள் புதைத்து வைத்திருந்தான். நீ நல்லவன் எனக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தாய். இனி நான் உன்னுடன் தான் இருப்பேன்”

வறுமையிலிருந்து விடுதலை பெற பொறமைக்காரன் பலவகையான முயற்சிகளை மேற்கொண்டான். ஆனாலும் அது அவனை வலுவாகப் பிடித்துக்கொண்டது. அவன் படிப்படியாகச் செல்வத்தை இழந்து பிச்சைக்காரனாகி விட்டான்.

**வடகோவை பூ.க.இராசரத்தினம்**

**நூல் அறிமுகம்**




விளைச்சலால் வீடு பொங்கும்!
விருந்தினால் உறவு தங்கும்!
களிப்புற மக்கள் மண்ணில்
கருமங்கள் ஆற்றி என்றும்
செழிப்புறச் சேர்ந்து வாழ்வர்!
சேமமே எங்கும் தங்கும்!
விளைச்சலை வேண்டி என்றும்
வேளாண்மை செய்து வாழ்வோம்!

**- 'செங்கதிர்' இலக்கிய வட்ட வெளியீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " அசத்தலான கணவன் "

சென்ற "தாயக ஒலி" இதழில் அசத்தலான மனைவி ஒருவரைப் பார்த்தோம். இந்த இதழில் ஒரு அசத்தலான கணவனைப் பார்ப்போமா?

ஒரு ஊரில் ஒரு கணவனும் மனைவியும் வசித்து வந்தார்கள் அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தாலும் கணவன் தனது மனைவி மீது ஏதாவது குறை கூறிக்கொண்டே இருப்பான். அதுவும் குறிப்பாக மனைவியின் சமையலிலே தினமும் குறை குற்றம் காண்பான்

முட்டை பொரித்து வைத்தால் இன்று முட்டையை அவித்திருக்கலாமே? என்பான். அவித்து வைத்திருந்தால் இதனைப் பொரித்திருக்லாமே. சுவையாக இருந்திருக்குமே! என்று குறை கூறுவான்.

மனைவியும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். ஆனால் கணவனின் குணமோ மாறவில்லை: மாறாக மனைவியின் மீது குற்றம் குறை கூறுவது அதிகரித்துக் கொண்ட போயிற்று.

கணவனுக்குப் பாடம் படிப்பிக்க எண்ணினாள்,

ஒரு நாள் மதிய உணவின் போது ஒரு முட்டையைப் பொரித்தும், பிறிதொரு முட்டையை அவித்தும் வைத்தாள். கணவன் இன்றாவது திருப்தியடைவான் என்று மனக்கோட்டை கட்டினாள்

கணவனும் உணவருந்த வந்தான். மனைவியும் பரிமாறினாள் பொரிந்த முட்டையைத் தட்டின் ஒரு பகுதியிலும், அவித்த முட்டையை தட்டின் இன்றுமொரு பக்கத்திலும் வைத்தாள்

கணவன் சாப்பிட உட்காந்தான். பொரித்த முட்டையும், அவித்த முட்டையும் மாறி, மாறிப் பார்த்தான். மனைவியின் முகத்தையும் பார்த்தான், பிறகு பொரித்த முட்டையைக் காட்டி இந்த முட்டையை அவித்திருக்கலாமே! என்றும் மற்ற முட்டையைக்காட்டி இதைப் பொரித் திருக்கலாமே! என்றும் சொன்னானே பார்க்கலாம்!

மனைவியோ திருத்த முடியாத ஜென்மம்! என்றும் சபித்துக்கொண்டாள்.

**இணுவை இரகு**

*"எழுதுவது மனத்திருப்தி. மனத்தில் உள்ளதை இடம் காலம் கடந்து பலரோடு பகிர்ந்து கொள்ளுதல் என்றும் மொத்தத்தில் மனத்தில் உள்ள அழுத்தம், வேதனையிலிருந்து விடுதலை பெறவே எழுதுகின்றேன்"*

**- பெருமாள் முருகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணெனும் ஓவியம்

"மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்!" என்ற மகாகவி பாரதியின் வாக்கு நினைவாகிக் கொண்டுவரும் இந்த விஞ்ஞான யுகத்தில் பார் போற்றும் ஒளிவிளக்குகளாய், இருளகற்றும் விண்மீன்களாய் திகழும் அன்பு கனியும் நங்கை உள்ளங்களைப் பெருமிதத்துடன் சிலவரிகளில் வரைய ஆசித்து நிற்கின்றேன். உலகில் பிறந்த எந்த உயிரும் தனியாக இயங்கி விடமுடியாது. ஒருவரின் துணை அவசியம். கடவுள் உலகைப் படைக்கும் போது முதலில் ஆணைப் படைத்து, அவன் தனிமையாக இருப்பது நல்லதன்று என பெண்ணை அவன் துணையாகவே படைத்தார். "துணை" எனப்படைத்த பெண் இன்று ஒவ்வொருவர் வாழ்விலும் மகளாக, சகோதரியாக, மனைவியாக, தாயாக என ஏதோ ஒரு நிலையில் துணையாகவே இருக்கின்றாள். தான் வாழும் குடும்பத்தின் முன்னேற்றத்துக்கு துணை நிற்பவள் பெண். இதனால் மனையாள், இல்லாள் எனப் பெண்ணை ஆள்பவள் என அழைப்பதும் தகுமே.

இன்று பெண்கள் பல்வேறு கொடுமைகளை உடலளவிலும் மனதளவிலும் எதிர்நோக்குகின்றனர். கவலைக்குரிய விடயம் என்னவென்றால் பல பெண்களின் முன்னேற்றத்திற்கு அவர்களை சேர்ந்த பெண்குலமே எதிர்ப்புத் தெரிவிப்பதாகும். உலகறியாது கலாசார, பாரம்பரிய, சமூக கொள்கைகளுக்குள் அழிந்து, புதிய மாற்றங்களை ஏற்க விரும்பாது வாழ்வோரே இவ்வாறாக பெண்ணியம் வீழ்ச்சியுறச் செய்கின்றனர். சிறுவயதில் திருமணம் முடித்தல், கல்வியை இடைநிறுத்தல், சீதனம் பெறல் என்பன பாரிய பிரச்சினைகளாகும். மேலும் இன்றைய இலங்கைச் சமூகத்தில் பெண்களின் வாழ்வுக்கு பெரும் சவாலாக அமையும் விடயம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பெண்கள் செல்வதாகும். குடும்ப வறுமையை நீக்கப் புறப்படும் பெண்களின் வாழ்வு பெரும்பாலும் சோகம் நிறைந்தாகவே இருக்கின்றது. இவற்றைப்பற்றி அறிந்தாலும்கூட குடும்பத்தினரின் உந்துதலினாலும், குடும்பத்தினரின் நன்மைக்காகவும் துன்பத்தை விரும்பி ஏற்கும்நிலைக்குப் பெண்கள் தள்ளப் படுகின்றனர். மேலும் உள்நாட்டில் நிகழும் பல்வேறு சீர்கேடான நிலைகளும் பெண்ணியத்துக்கு பெரும் சவாலாகும்.

பெண்களை எம் கண்களாக மதிக்கும் காலத்தை நாம் இன்றிலிருந்து செதுக்கிடுவோம். ஆண்டாண்டு காலமாக மகளிர் தினத்தை மாத்திரம் கொண்டாடும் நாம் அவர்களின் உரிமையை என்றும் காக்க முன்வர வேண்டும். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிரின் மதிப்பும் ஒன்றுதான். அது ஆணாக இருந்தால் என்ன பெண்ணாக இருந்தால் என்ன? பெண்ணை பாரமாக மதிக்கும் இச் சமுதாயம் திருந்த வேண்டுமென எண்ணுவதை விட எம் ஒவ்வொருவர் மனதிலும் பெண்ணுக்கென உரிய இடத்தை வழங்குவோம். பெண் அடிமை பற்றியும் பெண் உரிமைத்துவம் பற்றியும் ஆயிரம் ஆயிரம் கோஷங்கள் எழுந்தாலும் அவை வெறும் வார்த்தைகளாக இல்லாமல் எம் செயலிலே காட்ட முயற்சிப்போம். எம் தாய்க்குலம் சிறக்க ஒன்றுபட்டு உழைப்போம். பெண்களை இழிவுபடுத்தும் சமூகமாக மாறாமல் அவர்கைள நாவாற் புகழும் மனித இனமாக மாற முன்வருவோம்.

*"விரைந்து நின்று சரித்திரம் படைத்திட*
*பாரதி படைத்த புதுமைப் பெண்ணாய்*
*எழுந்திடு! உலகை மாற்றிடு!"*

**- அருட்சகோதரர் ச.சந்திரதாஸ் அ.ம.தி**

**நன்றி - நான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் பயன்

ஒரு தேசத்தில் ஓர் அரசனுக்கு இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அரசன் தன் பிள்ளைகள் இருவரில், மூத்தவனுக்கு நாளுக்கு நாள் அவன் வேண்டியளவுக்கு திரவியங்களைக் கொடுத்துக் கொண்டும். இளையவனுக்கு ஓர் உபாத்தியாரை வைத்து ஒழுங்காகக் கல்வி கற்பித்துக் கொண்டும் வந்தான். இளையவன் கிராமமாகக் கற்றுக்கொண்டும் வந்தான். இளையவன் கிரமமாகக் கற்றுக் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தவனாயினான். மூத்தவன் தான் வைத்திருந்த செல்வத்தினாலே மேன்மேலும் செருக்கும் அகங்காரமும் உள்ளவனாய் கல்வியையும் நல்லொழுக்கத்தையும் அவமதித்துத் துட்டனாயினான்.

இந்த இரண்டு புத்திரர்களும் பிதாவினாலே வேறுவேறு தேசங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். மூத்தவன் தன் பொருள்களையே துணையென்று அவைகளை எடுத்துக்கொண்டு குறித்த தேசத்துக்குப் போய்த் தன் மனம் போனவாறே பல வீண் செலவுகள் செய்து தான் கொண்டு போன பொருள் முழுதையும் இழந்து, பழி பாவங்களைத் தேடித் தரித்திரனாகிப் பின் கடன்பட்டு அக்கடனை இறுக்க முடியாமையினாலே சிறைச்சாலையில் அடைபட்டுப் பெருங்கஷ்டத்தை அனுபவித்தான்.




இளையவன் கல்வியே துணையென்று உறுதி செய்து, தான் படித்த புத்தகங்களை எடுத்துக் கொண்டு குறித்த தேசத்தை அடைந்து, கல்வியிற் சிறந்த அத்தேசத்தரசனால் உபசரிக்கப்பட்டு, அவன் தன் மகளை விவாகஞ் செய்து கொடுக்க, சிலகாலம் அங்கிருந்து, பின்பு தன் மனைவியோடும் அவன் கொடுத்த அளவிறந்த திரவியங்களோடும் தன் பட்டணத்தை அடைந்தான். பிதா அவனுடைய நல்வரவினால் மிகுந்த சந்தோஷமடைந்து, தன்னுடைய இராச்சியத்தை அவனுக்கே கொடுத்தான். பிதாவினுடைய அரசுரிமையைப் பெற்ற இளைய குமாரன், தன் தமையன் அந்நிய தேசத்திலே சிறைச்சாலையில் அகப்பட்டிருந்ததைக் கேள்வியுற்று அவனைச் சிறையின்னிறும் மீட்டு, நீதிகெடாது அரசாண்டு, பெருமகிழ்ச்சியோடு வாழ்ந்தான். மூத்த குமாரனுக்குரிய அரசுரிமை இளைய குமாரனுக்கு கிடைத்ததற்குக் காரணங்கல்வியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திரமான செய்திகள்



இவ்விதழின் செழுமையான ஆக்கங்கள், வழக்கமான பத்திகளிலும் மற்றும் அறிந்ததைச் சொல்ல வந்தோம், கேட்டதைச் சொல்ல வந்தோம், உங்கள் விருந்தாகிய புதிய பத்திகளிலும் இலக்கியம், வாழ்வியல் சார்ந்த காத்திரமான செய்திகளை வாசகருக்குப் பகிர்கின்றன. எழுத்துருக்கள் சில இளையோரை நல்வழிப்படுத்துவதாக அமைந்திருப்பதோடு, வயது வந்தோரையும் அவர்களின் நடத்தைக் கோலங்களை மறுவாசிப்பு செய்யத் தூண்டுகின்றன. அத்தோடு, வாசகனதும் புதினக் களஞ்சியத்தைப் பருமனடையச் செய்கின்றன.

இப்படி எண்ணித்தானா பாரி வள்ளல் முல்லைக்குத் தேரைக் கொடையாக வழங்கினான்? எனச் சிந்திக்க வைக்கின்றது கலாநிதி சேமசுந்தரத்தின் கட்டுரை. தாவரங்கள் மனிதருக்கு எவ்வளவு அத்தியாவசியமானவையென்பதைக் காட்டுகின்றது. காலை எழுந்தவுடன் சமகாலத்தில் டெங்கு நுளம்பை அழித்தொழிக்க விசிறும் நாசினியின் மணத்தோடு தான்நடமாடுகின்றோமல்லவா? இது பற்றிய சங்கதிகளை நாட்டோரையும் வீட்டோரையும் நகரத்தோரையும் கூவி அழைத்து 'டெங்கு ஒழிப்போம்' என அணி சேர்க்கிறார் கவிஞர் நா.தியாகராஜா.

'ஹலோ என்றால் கிலோவில் டொலர் வரும் எனப் புளுகிப் பெருமிதப்பட்டோமல்லவா? ஆனால் சொந்த பந்தங்களை விட்டு வெளிநாடுகளில் சிதறியோர் அந்த டொலர்களைச் சம்பாதிக்க வெள்ளைத் தோல்களின் பனி நிலங்களில் முகம்கொடுக்கும் அவமானங்களையும் மன உளைச்சல்களையும் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் உருக்கமாக வெளிப்படுத்துவதை கட்டுரையாசிரியர் பா.ஆனந்தகுமார் நிறுவுகிறார்.சொந்த மண்ணுக்கு அன்னமானாலும் அந்நிய மண்ணில் காகம் தான் என்பதை உணர வைக்கிறார். 'புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்பது வலியின் இலக்கியம்' என்ற உண்மையையும் சொல்கிறார். பதச்சோறாகவே மேற்கூறிய இவ்விதழின் மேற்படி ஆக்கங்களை முன்னிலைப் படுத்தினோம். ஏனைய ஆக்கங்களையும் வாசித்துப் பகிருங்கள்.

**எம்பியெஸ்**

**ஞாயிறு தினக்குரல்**

# வாழுகவே!

'தாயின் ஒலி' க்கு நிகரான
'தாயக ஒலி' யைப் போற்றுகின்றேன்!
நோயகமான தாயகமே,
நூறாயிரமாய் வாழாதோ?

நல்ல தலைப்பு நற்றலைமை,
நம்பிடவைக்கும் நன்னெஞ்சம்!
வெல்லும் ஒருநாள் வீறுடையும்,
விடாது தொடர வேண்டுகின்றேன்!

என்ன தானில்லை இவ்வேட்டில்?
எல்லாமுண்டு உண்டடடா!
தின்னல் குடித்தல் போன்றேதான்
செந்தமிழ் கற்றலும் அவசியமே!

நன்றே வருக நலந்தருக
நாட்டுக்குரியவை நல்கிடுக!
என்றுந் தாயக ஒலி பரப்பும்
இரு திங்கள் ஏடு வாழுகவே!

**தாமரைத் தீவான்**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக ஒலி




"தாயக ஒலி" யின் 29ஆவது இதழ் வைகாசி - ஆனி (2017) மாதங்களுக்கு உரியதானதால் தொழிலாளர் தினமான மே தினத்தை அடையாளப்படுத்தும் அழகிய வர்ண அட்டைப்படத்தோடு வெளிவந்துள்ளது. சமத்துவ நிலையை மேதினியில் நிலைநாட்ட மார்க்சியப் பொதுவுடைமைக் கோட்பாட்டை மானுடத்துக்களித்த மாமேதை கார்ல்மார்க்ஸ், பிரபல ஒலிபரப்பாளர் (அமரர்) செல்வி சற்சொரூபவதி ஆகியோரின் படங்களும் உலகப்பிரச்சித்தி பெற்ற பாட்டாளிகளின் சிலையும் முகப்பு அட்டையில் இடம்பெற்றிருக்கின்றன.

1960 களில் முற்பகுதியில் செல்வி.சற்சொரூபவதி நாதன் இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை அறிவிப்பாளராக நியமனம் பெற்றார். தன்னகத்தே கொண்டிருந்த செழிப்பான தமிழ் மொழி வளத்தால் தன் அறிவிப்பாளர் பணியை அனைத்துத் தமிழர் மனங்களிலும் ஆழப்பதிய வைத்தார்.

மொழி, பண்பாடு, சமயம் சம்பந்தமான உன்னத மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்த இவர், உண்டா விருதைப் பெற்றவர். வானொலியின் ஆங்கில் சேவையின் கட்டுப்பாளராகவிருந்து தமிழ்ச் சமூகத்துக்கு பெருமை சேர்த்தவர் என்பது நினைவு கூரத்தக்கது.

தோழர் ப.ஜீவானந்தம், எழுத்தாளர் ஜெயகாந்தன், மலாலா, பேராசிரியர் வ.மகேஸ்வரன், சிறுவர் இலக்கியவாதி ஓ.கே.குணநாதன், ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் ஒருவரான இலங்கையர்கோன், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி, சமூகஜோதி ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, சிங்கள நாடகக்கலைஞர் பராக்கிரம கிரியெல்ல ஆகியோரின் மனித நேயம் இழையோடும் வாழ்வியல் கோலங்களை இரத்தினச் சுருக்கமாக இதில் அறிய முடிகின்றது.

தமிழக சட்டசபை உறுப்பினராகவிருந்த தோழர் ப.ஜீவானந்தத்தின் எளிமையான வாழ்க்கையை அவர் துணைவியார் எடுத்துரைக்கின்றார். "வீடெல்லாம் ஓட்டை, சூரியனும் சந்திரனும் வருண பகவானும் எங்கள் வீட்டில் சுதந்திரமாக உட்புகுவார்கள். அப்படியொரு மழைநாள், இரவு முழுவதும் நான் தண்ணீரை எடுத்துக்கொட்ட அவர் கூரையைச் சரிப்படுத்திக் கொண்டு குந்தி இருந்ததும் உண்டு." என உருகுகிறார்.

இந்தியாவில் இப்போது புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தும் ஒழுக்கு வீட்டில் தான் வாழ்ந்ததாகவே தெரிவிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயகாந்தனின் வாழ்க்கை குறிப்புக்களை வாசித்த போது, மலைப்பாகவே இருந்தது. படைப்புகளின் ஊடாக மட்டுமன்றி படைப்பாளியின் வாழ்வின் ஊடாகவும் பார்ப்பது உண்மை நிலையைத் தருமென்பதை உணர்த்தியது. இலக்கியம் அவரது செம்மையான வாழ்க்கையை அழிக்கவில்லையென்ற கருத்தேற்றம் உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளி ஆனந்தியின் "உயிர் விட்ட தமிழும் உறங்கும் உண்மைகளும்" என்ற இவ்விதழ் சிறுகதையில் மதமாற்றத் திருமணத்தால் தாய்மொழியான தமிழ் உயிர் விடுமென உறைக்கச் சொல்கிறார். இவ்விடயத்தில் தமிழ் மொழியை வளப்படுத்திய வேற்று மத அறிஞர்களையும் மறந்து விடக் கூடாது! தாயக ஒலியும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரை முன்னட்டையில் நிரந்தரமாக்கியுள்ளதே!

வேதக்கார மாப்பிள்ளைக்கும் தங்காவுக்கும் ஏனொரு நந்தனார் பிறக்கக் கூடாது?

சிங்கள நாடகக் கலைஞர் பராக்கிரம கிரியெல்லவின் 'நகரும் அரங்கான மக்கள் களரி' நாடக நிறுவனம் பற்றியும் அதன் சாதனைகள் பற்றியும் இவ்விதழில் வாசித்தறிய முடிகின்றது. கேட்டதைச் சொல்ல வந்தோம், சிறுவர் கதை, நாடோடிக்கதைகள், கவிதைகள், நூல் அறிமுகம் என்பனவும் இதில் உண்டு. பகிர்வதற்கான பயனுள்ள கற்கைகளைப் பெறலாம்.

**செல்லக்கண்ணு**
**வீரகேசரி**

# தாயக ஒலியின் வருகை என் உளத்திலும், இல்லத்திலும் கொண்டு வரும் குதூகலம் சொல்லில் அடங்காதது!

தமிழின்பத்தின் தராதரம் பற்றி உண்மையில் அறிவார் அறிவார்.

என்னதான் கணனித் தொழில்நுட்பத்தின் காரணமாக, இன்றைய சமகாலச் சூழலில் இதழியல் துறையானது எளிதுபடுத்தப்பட்டிருப்பது உண்மையே ஆனாலும் தொடர்சியான சிற்றிதழ்களின் வருகைக்கு மெய்யான ஆர்வமும் கடின உழைப்பும் சிந்தனைத் திரட்சியும் நேரமுகாமைத்துவமும் சான்றாளர், வாசகருடன் சிறந்த தொடர்பாடலும் அவசியமான முன்நிபந்தனைகள் ஆகும்.

இவ்வகையில் உங்களின் இலக்கிய ஞானமும் இதழியல் துறைசார் புலமையும் "தாயக ஒலியின்" ஒவ்வொரு பக்கத்திலும் தெற்றெனப் புலப்படுகின்றன.

அட்டைப்பட வடிவமைப்பு முதற் கொண்டு, இயைபான, சமகால வாசிப்புக் கவர்ச்சித் தோதான வடிவ நேர்த்தி, விடய தானத் தெரிவின் மீது கடைக்கொள்ளப்படும் தராதர அளவுகோல் இவை யாவும் தங்களின் உழைப்புச் செழுமையைப் பறை சாற்றுகின்றது.

இன்று போருக்குப் பின்பாக பல்வேறு சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிறழ்வுகள் எமது சமூகக் கட்டுமானத்தினையே கறையானாக அரித்துக் கொண்டிருப்பது கண்கூடு. இந்நிலைமை பற்றித் திறந்த மனத்தோடு விவரிக்கும் கட்டுரைகளைப் பிரசுரிப்பதும் நலன் பயக்கும்.

**- ச.சசீதரன்**
**ஆரயம்பதி - 01, மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments From

# N.Ranjithakumaran

MA (Human Rights)


## Solicitor

180 Mitcham Road
Tooting
London SW17 9NJ
UNITED KINGDOM



Tel - 0208 767 9717
Mobile - 0795 688 6749
Fax - 0208 767 9684

email : ranjit@ranjitandco.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kanaga Solicitors

**KEY PERSONNEL**

Name : Kanakavalli Nadarajanpillay
Kanaga Solicitors
108 High Street, Colliers Wood
London - SW 19 2 BT

Position in the firm : Principal Solicitor

**Academic/ professional Qualifications:**
L.L.B(Hons), Barrister of Lincoln's Inn, Masters at Law (L.L.M), Advocate & Solicitor of High Court of Malaya, Solicitor of the Supreme Court of England and Wales.

**Relevant and present Experience:**
Immigration asylum, Residental conveyancing, Commercial conveyancing, Civil litigation, Criminal litigation, Family & divorce cases, Land loard & tenant, wills and probate.

Successful practitioner of 16 years.





**Tel: 07878278131**
**020 8544 1100**
**108 High Street, Colliers Wood**
**London - SW 19 2 BT**
**email : kanakavalli_ek@yahoo.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Luckyland

## BISCUIT MANUFACTURERS




NATTARANPOTHA, KUNDASALE, SRILANKA.

T: +94 081 2420574, 2420217, Fax : + 94 081 2420740

E-mail : luckyland@sltnet.lk



சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org